விவகாரம் பெரிது! விளம்பரம் பூஜ்யம்!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (4—11—49) | வெளியீடு (5—11—49) | இதழ் 82

போர் நிறுத்தப் பணிக்குத் தக்கவர்கள் அவர்களே

புகழ்தேடிகளால் பயன் விளையாது

மக்கள் மயக்கம் கொள்ளாமலிருப்பதே மக்களாட்சிப் பண்பாகும்

இன்று உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்து இருக்கிறது. ஒன்றின் மீது ஒன்று அணுக்குண்டை வீச, அதற்கான வாய்ப்பை எதிர்நோக்கிக்கொண்டு இருக்கின்றன. எந்த ஒரு முகாமாவது அலட்சியமாக ஏதாவது ஒரு ஆத்திரமூட்டும் சொல்லைத் தவறி உச்சரித்துவிட்டாலும், ஆகாய குண்டு வீச்சு ஆரம்பித்து விடும். உலகம் ஒரு பயங்கரக்களமாகி விடும். இதுவரையில் நடித்து சிறுகச் சிறுகச் சிறப்புப் பெற்றுவரும் மனிதப் பண்பாடுகள் அனைத்தும் அழிந்து போய் விடும். மீண்டும் உலகை அந்தகாரம் சூழ்ந்து கொள்ளும். உயர்ந்த கோட்பாடுகள் என்று மனிதன் கொண்டிருந்த தத்துவங்கள் எல்லாம் மறைந்தொழிந்து விடும். எனவே, மீண்டும் ஓர் பெரும்போர் ஏற்படாமல் தடுக்க, மனித தர்மத்தில் நம்பிக்கை உடைய ஒவ்வொருவரும், தங்களால் இயன்ற அளவு, உலக சமாதானத்துக்குத் தொண்டாற்றக் கடமைப்பட்டவர்களாயிருர்கள்.

போர் வெறியர்களுக்கு, நல்ல புத்தி ஏற்படும் அளவிற்கு, போரை எதிர்க்கும் உலக மக்களின் ஒன்றுபட்ட சக்தியை வெளியிட்டாக வேண்டும். மக்களின் போக்கு, போருக்கு எதிராக இருக்கிறது என்பதை, போர் விரும்பிகள் அறிந்துகொள்ளுமாறு செய்தால் தான், ஓரளவிற்காவது போர் தொடுக்கும் விருப்பத்தை அவர்கள் விட்டொழித்து விடுவார்கள்.

ஒரு முகாமிற்கு அமெரிக்காவும், மற்றொரு முகாமிற்கு சோவியத் ரஷ்யா புதுத் தலைமைதாங்கி இருக்கிறது என்பது எவரும் அறிந்ததே. இந்த இரு நாடுகளும் கொண்டிருக்கும் அடிப்படையான இலட்சியத்தில் உள்ள முரண்பாடுதான், ஒன்றின் நடத்தையை மற்றொன்று சர்வ ஜாக்கிரதையாகக் கண்காணித்துக்கொண்டு வருமாறு செய்துவருகிறது. இந்த இரு இலட்சியங்களும் ஒன்றுபட்டுப் போவது என்பது ஒன்றும் [illegible] காரியமாகும். முதலாளித்துவம் தன்னிச்சையாக என்று தற்கொலை செய்துகொள்ள முன்வராது. அதற்கு எதிரான ஓர் சக்தி வேரூன்றி வளர்ந்து நல்ல பலம் பெற்று, முதலாளித்துவத்தை எந்த முறையிலேனும் முறியடிக்க முற்பட்டாலன்றி, முதலாளித்துவத்திற்கு முடிவென்பதே ஏற்படாது. முதலாளித்துவக் கோட்டை சீர் செய்யமுடியாத அளவிற்குச் சரிந்துவிட்டாலும், முடிந்தவரையில் சீர் செய்துகொண்டு, என்றென்றும் நிலைத்து நிற்கவே முயற்சித்துவரும் முதலாளித்துவம்.

சமதர்மம் அத்தன்மையது அல்ல. என்றென்றும் வளர்ந்து கொண்டே வரக்கூடிய உயிர்ப்புச்சக்தி கொண்டது சமதர்ம தத்துவம். என்றென்றும் இளமையோடு இருந்துவரக்கூடிய ஏற்றமுடையது. முதலாளித்துவத்தைப் போலன்று இதற்கு ஈளை இருமல் — காசம் க்ஷயம் — கக்கால் பிடிப்பு — பாரிச வாதம் முதலிய உயிரை வாட்டி வதைக்கும் கொடும் பிணிகள், இந்த சமதர்மத்துவத்திற்குக் கிடையாது. மனித இனத்துக்கு புதுவாழ்வு அளிக்க வந்த பெரும் கோட்பாடு இது என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

இந்த முரண்படும் இரு தத்துவங்களின் பிரதிநிதிகளாகத்தான் இரு முகாம்களும் இருந்துவருகின்றன. ஒன்றை ஒன்று விழுங்குவதில், இந்த இரண்டுக்குள் போட்டி ஏற்பட்டு இருப்பது இயற்கையேயாகும். இரு முரண்பட்ட வெவ்வேறு சமுதாயக் கோட்பாடுகளைக் கொண்டிருப்பவர்கள், தங்கள் தங்கள் கோட்பாடுகளை உலகில் நிலைநிறுத்துவதற்காக மேற்கொண்டுள்ள முறைகளில் மட்டும் முரண்பாடு இல்லை — மாறுபாடும் இல்லை. ஒன்றையே மற்றொன்று ஒத்து இருக்கின்றன. சுதந்திரத்தைக் குலைத்துவிட்டு சுதந்திரத்தைக் காப்பதாகப் பேசுவது, வெறும் மயக்கத்தைத் தருவதாகவே இருந்துவிடுகிறது. இது நியாயமான ஐயப்பாடு. நல்ல விளக்கம் தேவை இதற்கு. நிந்தனை நிகண்டு பாடுவது, சதுர் அகராதியாகாது!

இரு தத்துவங்களின் அணுக்குண்டு பிரதிநிதிகளான அமெரிக்க அரசாங்கத்தின் செயலாளர் ஆச்சிசனும், சோவியத் வெளிநாட்டு அமைச்சர் ஆந்திரே வைஷின்ஸ்கியும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசப் போகிறதாம். லேக்சக்சஸ் செய்தி ஒன்று கூறுகிறது. ஆச்சிசனின் துணைவரான டாக்டர் பிலிப் ஜேசப் சோவியத் பிரதிநிதியோடு கலந்து பேசி ஒத்துப்போவதற்கான ஏற்பாடு ஒன்றையும் முடித்து இருப்பதாகவும் அந்தச்செய்தி அறிவிக்கிறது. இந்தச் சந்திப்புக்கு ஐக்யநாடு சபையின் தலைவர் ரமோலாவும், செயலாளர் டிரைகிவ்லியும் காரணஸ்தர்களாக இருந்தார்களாம். ஐக்யநாடு அரசியல் குழுவில், ஐந்து வல்லரசுகளுக்குமிடையில், சோவியத

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

தொழிற்சங்க உலக சம்மேளனம்

சென்னை, நவ. 2—

கம்யூனிஸ்ட் சார்புடைய தொழிற்சங்கங்களின் உலக சம்மேளன மண்டல மாநாடு பீகிங்கில் நடைபெற இருக்கிறது. அம்மாநாட்டில் கலந்து கொள்ள உலகெங்கணுமிருந்து பிரதிநிதிகள் வருவர். அகில இந்தியத் தொழிற் சங்க காங்கிரசின் சார்பில அகில இந்தியத் தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர் தோழர் வி. சக்கரை (செட்டியார்) கலந்து கொள்வாரெனத் தெரிகிறது. தோழர் சக்கரை நவம்பர் 10-ந் தேதியன்று சென்னையினின்றும் புறப்படுகிறார்.

சர்வாதிக்கம் சரிகிறது

இந்தோசீனத்தில் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் பிடிப்பை-ஆதிக்கத்தை இழந்துவிட்டனர் என்பது திட்டமாகத் தெரிந்துவிட்டது. வியட்நாம் தலைவர் ஹோசிமின் நாட்டில் 80 சத விகிதப் பிரதேசத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டனர். அங்கே பிரஞ்சுக்காரர்கள் பொருளாதார, அரசியல், இராணுவச் சக்திகள் அனைத்தையும் இழந்துவிட்டனர். சர்வாதிகாரமும், பிறரை அடக்கியாளும் ஆணவ வெறியும் எவ்வளவு நாளைக்கு வெற்றியுடன் வாழ முடியும். என்றைக்கேனும் ஒருநாள் சர்வாதிகாரம் சரிந்தே தீரும் என்பதைக் காட்ட இந்தோசீனாவில் பிரெஞ்சு ஆதிக்கம் தக்க சான்றாகவிளங்குகிறது.

காங்கிரஸ் ஆட்சிக்கோர் எடுத்துக் காட்டு

வெள்ளையர் ஆட்சியில் காணாத விநோதங்கள்!

கி. பஞ்சாப் மந்திரிசபை ஊழல்!

ஆட்சியைத் திறமையாக நடத்தும் ஆற்றல் எங்களுக்கே உண்டு என்று அடிக்கடி பட்டாபியும், காங்கிரசைத் தவிர மற்றக்கட்சிகள் இந்நாட்டை ஆளமுடியாது என்று தமிழ்நாடு ராஷ்ட்ரபதி தோழர் காமராஜரும் பேசுகின்றனர். ஆனால், நடைமுறையில் பார்க்கின்றபோது சகலம் ஊழல் மயமாக இருக்கின்றது. மாகாணங்களில் நடைபெறும் ஆட்சிமுறையைச் சற்று கூர்ந்து கவனித்தால் காங்கிரஸ் ஆட்சி கவைக்குதவாத ஆட்சி என்றே நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சென்னை மந்திரி சபையில் மட்டுமே ஊழல்கள் நிரம்பியுள்ள, அதனால்தான் மேலிடத்தார் இம்மாகாண விவகாரங்களில் தலையிடுகின்றனர் என்று சொல்லுவதற்கில்லை.

கடந்த சிலநாட்களாக கிழக்குப் பஞ்சாப் மந்திரிசபையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால் எங்கும் இதே நிலைதான் என்பது தெரியவரும்.

கள்ள மார்க்கெட் காரர்களைக் கண்டித்த காரணத்தால் கி. பஞ்சாப் முதலமைச்சர் தோழர் சாச்சார் தமது பதவியை விட்டு விலக நேர்ந்தது. அதனைத் தொடர்ந்து இன்னும் அந்த சலசலப்பு இருந்துகொண்டே இருக்கிறது. கி. பஞ்சாப் சட்டசபை உறுப்பினர்களுக்குள்ளேயே கோஷ்டிப் பிரிவுகள் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டன. வெளியேறிய பிரதமருக்கு ஆதரவு தருவோர் ஒருபுறமும், மற்றவர் ஒருபுறமாக நின்று போராடுகின்றனர். பள்ளிக்கூட மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொண்டு உபாத்தியாயரிடம் நீதி கோரப் போவது போல், கிழக்குப் பஞ்சாப் மந்திரிசபைத் தகராறைத் தீர்க்க மத்திய சர்க்காரிடம் காவடி தூக்கிக்கொண்டு போக சில காங்கிரஸ்காரர்கள் முன் வந்துள்ளனர். சேரு வாட்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்களாம். அது மட்டுமல்ல, 20 காங்கிரஸ்காரர்கள் கூடி தோழர் சாச்சாரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கின்றனர். மேலும் சட்டசபையைக் கலைத்துவிட்டு புது தேர்தல் நடத்தி புது சட்டசபை அமைப்பதென்றும், அதுவரை கி. பஞ்சாப் ஆட்சிப் பொறுப்பை மத்திய சர்க்காரிடமே ஒப்படைத்துவிடுவதென்றும் தீர்மானித்திருக்களாம்.

இதுதான் காங்கிரஸ் ஆட்சியாளரின் நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டு. இப்படிப்பட்ட காங்கிரசார்தான் அன்று வெள்ளையர் ஆட்சியைக் குறைகூறித் திரிந்தனர். அந்த வெள்ளையர் ஆட்சியையும் இந்த தேசிய வீரர்களின் ஆட்சியையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற ஒருவன் நிலைமை வரின் என்ன நினைப்பான்? வெள்ளையர் ஆட்சியே மேல் என்றல்லவா கூறுவான்.

அண்ணாமலைநகர்ப் பகுதியில் 'கோட்ஸே'த்தனம்!

மீண்டுமொரு 'வேலாயுதம்' வைதீகத்துக்குப் பலி!

சமூகத் தொண்டர் துணைவியோடு கொலையுண்டார்

அண்ணாமலைநகர், நவ. 3—

சிதம்பரத்தையடுத்த அண்ணாமலை நகரில் கடந்த அக்டோபர் 31-ந் தேதியன்று கோரப் படுகொலைகள் இரண்டு நடந்திருக்கின்றன. அந்நிகழ்ச்சியைப் பற்றி முழுவிவரங்களும் நமக்குக் கிடைக்கவில்லை யெனினும், கொலைக்குள்ளானோர் ஆதித்திராவிட வகுப்பைச் சேர்ந்த மகாமகம் (35) என்பவரும் அவர் மனைவியுமாவாரென்றும் தெரிகிறது.

மேற்படி ஆசிரியர் அண்ணாமலை நகர் சேரியில் வாழ்ந்து வந்தாரென்றும், அவர் சமூக முன்னேற்றத்துக்கான தொண்டுகளில் பெரிதும் ஈடுபட்டு வந்தாரென்றும் அறிவிக்கப்படுகிறது.

போலீசார் புலனறிந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மீண்டுமொரு 'தலைவலி'!

கர்னாடக மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் எஸ். நிஜலிங்கப்பா ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் என். ஜி. ரங்காவுக்கு விடுத்திருக்கும் தகவலொன்றில், கர்னாடக—ஆந்திர மாகாணங்களின் எல்லையைக் குறித்துத் தங்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டுமென்றும், தகராறு ஏதாவும் ஏற்படும் பட்சத்தில் அதனை எல்லைக் கமிஷனின் விசாரணைக்கு விடவேண்டுமென்றும், அக்கமிஷனின் முடிவை ஏற்பதாக இருதரப்பாரும் இப்போதே உடன்படிக்கைக்கு வந்தாக வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாலை மணி

சென்னை 4—11—49 வெள்ளிக்கிழமை

வரிப்பணம் என்ன ஆற்று நீரா?

ஆண்டுதோறும் பதினேழரைக்கோடி ரூபாய்களை ஈடுவைக்கச் சம்மதித்து, மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது சென்னை மாகாண அரசாங்கம். அரசாங்கத்தின் துணிவைக் கண்டு போற்றினார்கள் மக்கள்; மது ஒழிந்து சமுதாய வாழ்விலே இன்பமணங் கமழும் என்றும் எண்ணினர்.

விளைவு என்ன ?

மதுவுக்காக ஈடுவைத்த பணத்தையும், அதற்கு மேலும் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவையும், வரிவிதிப்பின் மூலம், மக்களிடத்திலிருந்து கறந்துகொண்டுவிடலாம் என்று எண்ணி அரசாங்கம் விதிக்கும் வரிச் சுமைகளைத், தாங்க முடியாமல், ஏழை மக்கள், எங்கும் அவலக் குரலெழுப்பி வருகின்றனர். அதேபோது, எந்த நாற்றம் மதுவிலக்கால் நீங்கிவிடும் என்று நன்மக்கள் எண்ணினரோ, அந்த மது வகைகளின் நாற்றம் சமுதாயத்திலிருந்து நீங்கவில்லை. —இன்னும் நீக்கப்படவில்லை. முன்பெல்லாம் அரசாங்கம் பெற்றுவந்த பதினேழரைக் கோடி ரூபாய்களை, இப்பொழுது அரசாங்கம் பெறவில்லை; வேறு யார் யாரோ தனிப்பட்ட முறையில், மறைவாக இருந்தும், சில வேளைகளில் வெளிப்படையாக உலாவியும் பெற்று இனிது வாழ்ந்துவருகின்றனர். குடி ஒழியவில்லை; நடமாடிக்கொண்டுதான் இருக்கிறது. சில இடங்களிலே சட்டத்தின் கண்முன் படாமல் மறைவாக நடமாடுகிறது; சில இடங்களில் குடியின் நடமாட்டத்தைச் சட்டம் காண மறுக்கிறது!

மதுவிலக்கு வெற்றி பெறவில்லை!

இதை அரசாங்கமே ஒப்புக்கொள்கிறது! சிறைச்சாலையிலுள்ள இடநெருக்கடி, மதுவிலக்குவழக்குகள், அதைஇனிது எடுத்தியம்புகின்றன! முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூரார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டுள்ளபடி, மது காய்ச்சும் சரக்குகளின் வியாபாரப் பெருக்கமே அதற்கு ஏற்றசான்றாக நிற்கிறது.

மதுவிலக்கை வெற்றிகரமாக அமுலுக்குக் கொண்டுவர, இன்றைய ஆளவந்தார்களால் இயலவில்லை! குடிப்பழக்கத்திற்குஅடிப்படைக்காரணங்கள் எவை என்பதை அறிந்து, அவற்றைஅகற்றி, வெற்றி காணவும் முடியவில்லை! இந்த நிலையில் குடியை ஒழிப்பதிலே தங்களுக்கு உள்ள அக்கரையை வெளிப்படுத்திக் கொள்ள விரும்புகின்றனர், சென்னை ஆளவந்தார்கள்! புதிய திட்டம் ஒன்று தீட்டியுள்ளனர்!

என்ன அப்படிப் புதிய திட்டம்? மாகாண மெங்கும் 442 குடியொழிப்புப் பிரசாரகர்களை நியமித்து, அவர்கள் பிரசாரத்தின் மூலம், குடிப்பழக்கத்தை நிறுத்தி விடுவது, என்பதாகும்.

குடியொழிய வேண்டுமென்பதிலே பெரும்பான்மையான மக்களுக்கு விருப்பம் இருக்கிறது. அதைத் தெளிவாக அறிகிறார்கள் இன்றைய ஆளவந்தார்கள்! ஆகவேதான், அதன் மீது தங்களுக்குள்ள அக்கரையைக் காட்டி மக்கள் அன்பைப்பெற்று, ஆட்சிப்பீடத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம், காங்கிரஸ் ஆட்சியாளர்க்கு ஏற்பட்டுள்ளது. **குடிப்பழக்கம் உள்ளபடியே ஒழிய வேண்டும் என்பதிலே அல்ல அவர்களுடைய கவலை படிந்திருப்பது; குடியொழிப்பிலே தங்களுக்குள்ள அக்கரை எவ்வளவு என்பதைக் காட்டிக்கொள்ள வேண்டும் என்பதிலேயேதான், அவர்களுடைய கவலையெல்லாம் தோய்ந்துகிடக்கிறது.** எனவேதான், பிரசாரகர்கள் மூலம், குடியொழிப்பை நடத்தும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள்!

திட்டம் வெறும் அக்கரை காட்டும் திட்டமாக மட்டும் இருக்கவில்லை; தங்கள் கட்சியாருக்கு அதிக லாபங் கொடுக்கும் திட்டமாகவும் இருக்கிறது. திட்டம் போடும் ஒவ்வொரு பொழுதிலும் அதுதானே அவர்கள் நோக்கம். பொதுமக்கள்பணம்பாழாகிறதா? அதைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை! பொதுமக்கள் உரிமை பாதிக்கப்படுகிறதா? அதைப்பற்றியும் கவலை இல்லை! ஆட்சிப்பண்புக்கு மாறுபட்டதா, அதைப்பற்றியும் அக்கரை இல்லை அவர்களுக்கிருக்கும் ஒரே ஒரு அக்கரை, காங்கிரஸ் அரசாங்கமும், காங்கிரஸும், காங்கிரஸ் காரர்களும் நிலைத்திருக்க வேண்டும், அவ்வளவுதான்!

442 மதுவிலக்குப் பிரசாரகர்கள் நியமிக்கப்படுவர்! மதுவிலக்குக்கு அரசாங்கம் காட்டும் மதிப்பு அது என்று பொதுமக்கள் நம்புவர், அந்த நம்புதலால் காங்கிரஸுக்குப்பலம்! 442 பிரசார அதிகாரிகளைக் காங்கிரஸ் காரர்களிடத்திலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்! அதனால் பதவிப்பசியால் பாதிக்கப்பட்டுத்தவித்திடும் 442 காங்கிரஸ் காரர்களுக்கு, எலும்புத்துண்டுகள் போட்டு, அவர்களை நன்றி விசுவாசப்பிராணிகளாக வைத்துக்கொண்டிருக்க வழியேற்படும்! இந்த 'நல்ல' நோக்கத்தைத்தவிர, வேறு என்ன உண்மைக்காரணம் அவர்களால் காட்டமுடியும்!

ஒரு கல்லில் இரண்டு மாங்காயை வீழ்த்துதல்! அதுபோல ஒரு திட்டத்தால் ஆளவந்தார்களின் 'வெளிப்பாட்டும்' அக்கரையுங் காட்டப்பட முடிகிறது; அதே சமயத்தில் 442 ஊழியர்களுக்கு இடந்தேடிக்கொடுத்துத், தங்களுக்கு என்றும் ஆதரவாளராக இருக்கச் செய்துவிட முடிகிறது.

கிராமபுனருத்தாரணத் திட்டத்தின் மூலம் பல காங்கிரஸ் காரர்களுக்கு வேலை கொடுக்க முடிந்தது; ஹரிஜன திட்டத்தின் மூலம் பலருக்கு எலும்புத் துண்டுகள் வீசமுடிந்தது; கதர்த் திட்டத்தின் மூலம் பல காங்கிரஸ் ஊழியர்களுக்கு வேலை, கொடுக்க இயன்றது; ஹிந்தித் திட்டத்தின் மூலம் பலருக்கு இடந்தேடிக் கொடுக்க முடிகிறது; இப்பொழுது மதுவிலக்குத் திட்டத்தின் மூலம் 442 பேருக்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. இவை அனைத்திற்கும் பொதுமக்களின் வரிப்பணம் கோடிக்கணக்கில் செலவழிக்கப் படுகின்றது; அதாவது பொது வரிப்பணத்தில், ஒரு தனிக் கட்சி, காங்கிரஸ், வளர்க்கப்படுகிறது. இந்தத் திட்டங்கள் ஏதாவது இதுவரையில் உருப்பட்டதாகப் புள்ளிவிவரம் உண்டா? இல்லை! எப்படி இருக்கும்! எல்லாம்தான் பாழ்ப்பட்ட—வேண்டப்படாத—தேவையற்ற திட்டங்களாயிற்றே! காங்கிரஸ் கட்சியை வளர்த்துக் கொள்ள, காப்பாற்றிக் கொள்ள பயன்பட்டிருக்கலாமே யொழிய, பொது மக்களுக்குக் காது ஒடிந்த ஊசி அளவு நன்மையாவது இத்திட்டங்களால் இதுவரையில் ஏற்பட்டதா? ஏற்படத்தான் முடியுமா?

உணவுப் பஞ்சம் நாட்டில் தலை விரித்தாடுகிறது—பட்டினிச் சாவுகளின் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது—கைத்தறி நெசவாளர் போன்றவர்கள் அல்லலுற்று இடத்திற்கு இடம் ஓடித் திரியும் அகதிகளாக மாறி வருகின்றனர் — கல்வியைப்பரப்ப பணமில்லை—உணவு வரவழைக்கப் பணமில்லை — மருத்துவ வசதியைப் பெருக்க அல்லது இருக்கும் வசதியைக் காப்பாற்ற பணமில்லை—இந்த நிலையில் மதுவை ஒழிக்கப்பிரசார அதிகாரிகள்! 442 பேர்கள்! அவர்களுக்குச் சம்பளம்! அவர்களுக்கு அலவன்ஸ்! அதற்கு ஒரு திட்டம்! பொது மக்களின் பணம், இப்படியா, ஒரு கட்சியின் நலனுக்கே பாழாக வேண்டும்! ஐயகோ!

தேசீயபோர் முன்னணிப் பிரசாரகர்களுக்குப், பணம் செலவழிக்கப்பட்டதையும், அது எந்த அளவுக்கு விரயமாக்கப்பட்டதாக இருந்தது என்பதையுந்தான் நாம் நன்கு அறிவோமே! அவர்களாவது ஓரளவுக்குப் பயிற்சி பெற்றவர்கள்— பயிற்சி கொடுக்கப்பட்டவர்கள் என்ற நிலையில் இருந்தார்கள். இன்று ஏற்படுத்தப் போகும் மதுவிலக்குப் பிரசாரகர்கள், எந்தப் பயிற்சி பெற்றவர்களாகக் கருதமுடியும், மந்திரிகள் பேச-வானொலிகள் ஒலித்துக்க-நாடகங்கள் காட்டி—இசைப் பாட்டுக்கள் பாடி—சிறந்த சொற்பொழிவு ஆற்றி—சட்டத்தை நீட்டி—குண்டாந் தடியை நிமிர்த்தி—துப்பாக்கியை நீட்டி இவ்வளவெல்லாம் செய்தும் ஒழிக்க முடியாத குடிப்பழக்கத்தைப் பயிற்சி—பக்குவம் திறமை—வகை—ஆற்றல் ஏதும் அற்ற மதுவிலக்குப் பிரசார அதிகாரிகளா சாதித்துவிடப்போகிறார்கள்! பொது மக்களின் வரிப்பணம் எவ்வளவு கேலிக் கூத்தாக்கப்படுகிறது!

மதுவிலக்குப் பிரசாரகர்கள் உண்மையில் மதுவிலக்குப் பிரசாரகர்களாக இருக்கப்போவதில்லை—அவர்கள் காங்கிரஸ் பிரசாரகர்களாகத்தானிருக்கப் போகிறார்கள்—அதுவும் அரசாங்கச் செலவில். அண்மையில் தேர்தல் வரப்போகிறது, அதற்குப் பிரசாரகர்கள் தேவை, அந்தத் தேவையைத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு அரசாங்கச் செலவின் மூலமே நிறைவேற்றிவிடவேண்டும், அதற்காகக் காங்கிரஸ் தலைவர்கள் கண்டுபிடித்த குறுக்கு வழித்திட்டமே, மதுவிலக்குப் பிரசாரத் திட்டமாகும்!

மக்களின் வசதியைப் பெருக்கித்தர அரசாங்கத்தினிடம் போதிய பணமில்லை; உள்ளதை வைத்துக்காப்பாற்றித்தர வரிகள் ஒன்றன்பின் ஒன்றாக மக்களிடத்திலிருந்து சொட்டுச் சொட்டாகக் கறக்கப்படுகின்றன; அதே சமயத்தில் விழல் போன்ற, உருப்படாத, ஒரு கட்சித் திட்டங்களுக்குப் பணம்வாரிஇறைக்கப்படுகின்றது! வரிப்பணம் என்ன ஆற்றுநீரா?

உலகக்கூடம்

['சம்மட்டி']

மனைவியாக வந்து வழக்குரைத்த காதை!

ஆம்! புதிய திருவிளையாடல் புராணத்தில் இது ஒரு படலம். சொத்தை ஏமாற்றிவிட, பங்காளிகள் முயற்சித்தபோது, இறந்து போன மாமனுக்காக, சொந்த ஜோலிகளை எல்லாம் மூட்டைக்கட்டி ஒரு பக்கமாக வைத்துவிட்டு ஓடோடியும் வழக்கு மன்றமேறி சாட்சியம் கொடுத்தாரே, அவர் யார் உங்களுக்குத் தெரியுமா? எந்த இடத்தில், எந்தக் காலத்தில் நடந்த சம்பவம் இது. என்றாவது தெரிந்தால் சொல்லுங்களேன் பார்ப்போம் இதைக் கண்ணாரக் கண்டு நமக்கு அறிவித்த அறிவாளியாவது உங்கள் நினைவில் இருக்கிறாரா, அதுவும் இல்லையா? சரி! சரி! நீங்கள் என்ன இவ்வளவு சிவத் துரோகிகளாக இருக்கிறீர்களே! கொஞ்சம்கூட பிடிக்கவில்லை, உங்கள் இருப்பு! தமிழ் நாட்டில் பிறந்தவர்களாக இருந்தால் இதுகளை எல்லாம் அல்லவோ நீங்கள் முதல் முதலாகக் கற்றிருக்க வேண்டியது! தவறிவிட்டீர்களே! மன்னிக்க முடியாது! மன்னிக்க முடியாது!

நான் மாடக்கூடலிலே முன்பொரு காலத்தில் குடியேறி இருந்தது தந்திரம் தெரிந்த ஒரு கும்பல்! அதன் தலைவன் பெயர் சொக்கநாதன். துணைவியின் பெயர் மீனாட்சி. அவர்கள் ஒருவரோடு ஒருவர் கொஞ்சி விளையாடிக் கொண்டே காலங்கழித்துவருவர்! இரவாவதும் விடிவதும் தெரிவதில்லை அந்தத் தம்பதிகளுக்கு. இதைக் கண்டு மக்கள் அத் தம்பதிகளைக் குறித்து இழிவாகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள் தலைமறைவாக! மீனாட்சி என்ன இருந்தாலும் பெண்ணல்லவா? கொஞ்சமாவது சூடு சொரணை இல்லாமல் இருக்குமா? கணவரான சொக்கநாதனிடத்தில் கோபித்துக் துக்கொண்டாள். மனைவியான மீனாட்சியின் கோபத்தைத் தணிக்கவும், மக்களின் மனத்தை மாற்றவும் தம்மை அண்டியிருக்கும் அன்னக் காவடிகளின் மாநாடு ஒன்றைக் கூட்டி, ஆலோசனையில் ஆழ்ந்தார். அந்த மாநாட்டில் பரஞ்ஜோதி முனிவர் என்ற ஒரு பஞ்சத்தாண்டியைப் பிடித்து, மக்கள் தம்மைப் பற்றி பக்தி விஸ்வாசம் கொள்ளுகின்ற மாதிரியில், தம்மைக் கதாநாயகனாக வைத்துக் கட்டுக்கதை ஒன்று தீட்டித்தரச்சொன்னார். தீட்டினாரையா, திறமைமிக்க அந்தத் தந்திரசாலி, திருவிளையாடல் புராணமென்று! அதில் சொக்கநாதன்தான் 'ஈரோ'! மீனாட்சிதான் ஈரோயின்'! நரி பரியாவது — பரி நரியாவது — பன்றிக் குட்டிக்கு சொக்கநாதன் பால் கொடுப்பது — போன்ற திகைப்பைத்தரும் காட்சிகளை எல்லாம் சேர்த்து சொக்கநாதன் நாடகத்தை தயாரித்துக்கொடுத்துவிட்டார். இதன் பின்னர், அங்குள்ள மக்கள் சொக்கநாதனிடத்தில் பயபக்தியோடு நடந்துகொள்ள ஆரம்பித்தனர். மீனாட்சிக்கும் மனக்குறை நீங்கி, எப்பொழுதும்போல் களியாட்டத்தில் காலங்கழித்துவந்தாள்!

பொதுமக்கள் தூற்றுதலிலிருந்து சொக்கநாதன் மீனாட்சியைக் காப்பாற்ற எழுந்த கற்பனை நூலிலே தான், மாமனாக வந்து வழக்குரைத்த காதை இருக்கிறது. எப்போதோ இறந்துவிட்ட, மண்ணோடு மண்ணாகிவிட்ட மாமனின் உடலை எப்படியோ உருப்படுத்தி, அதற்குள் சொக்கநாதன் புகுந்துகொண்டு, நீதிமன்றமேறி நீதியை நிலை நாட்டினாரும்! அருமையான கற்பனை!

இது வெறும் கற்பனை! உண்மையான கதையை இனி கூறப்போகிறேன் கேளுங்கள் வாசகர்களே!

தன் மனைவியைக் காணோம் என்று ஒருவன் போலீசிடம் புகார் கூறினான். மருத்துவச்சாலை பிணப் பாதுகாப்பு கிடங்கில் இருந்த ஒரு பெண் பிணத்தை, அவன் மனைவி தான் என்று அவனுடைய மாமனார் அடையாளம் கண்டு பிடித்துக் கூறினார். அவ்வளவுதான் போலீசுக்குக் கணவன்மீதே தன மனைவியைக் கொன்றிருப்பானோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. எது மேலாவது போலீஸ் பார்வை விழுந்துவிட்ட பிறகு எந்த ஜீவராசியாவது பலியாகாமல் தப்பிப் பிழைக்க முடியுமா? உடனே மனைவியைப் பறிகொடுத்துவிட்டுப் பரதவித்துக் கொண்டு இருக்கும் அந்த மனிதன் உள்பட நால்வரை சிறையில் அடைத்து விட்டதுபோலீஸ். தாம் விரும்பும் வாக்குமூலத்தை வாங்க. போலீஸ் அவர்களுக்கு வேண்டிய உபசாரம்செய்யாமலாஇருந்திருக்கும் அப்போதுதானே போலீசுக்குத் தேவையான உண்மையை 'குற்றவாளிகள்' கக்குவார்கள்!

நீதிமன்றத்துக்கு வந்தது வழக்கு! குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்பட்டக் கணவனும், மற்ற மூவரும் குற்றவாளி கூண்டில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். விசாரணைத் தொடங்கிற்று. எவளொருத்திக் கொலை செய்யப்பட்டாள் என்று கூறப்பட்டதோ, அவளே நீதி மன்றத்தில் தோன்றினாள்! பிணந்தான் மன்றத்துக்குள்நுழைந்துவந்துவிட்டதோ என்ற ஆச்சரியம் அங்கிருந்தவர்களுக்கெல்லாம் ஏற்பட்டுத்தான் இருக்கவேண்டும்! நல்லகாலம் இதை **அறுபத்தி ஐந்தாவது** காட்சியாக, சொக்கனின் நாடகத்தில் சேர்க்காமல் இருந்துவிட்டார்கள் நமதுநிடுபர்கள். நமதுநிருபர்களுக்குபரஞ்சோதியாருக்கு இருந்தமாதிரியான திறமை இல்லையா என்ன; இருக்கிறது! ஆண்டு 1949 ஆக இருக்கிறதே என்ற கவலைதான்!

மற்றொரு கதை! குப்பை மேட்டிலே குப்பைகளுக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணின் பிரேதத்தைப் பார்த்து அது, தன் காணமற்போன மனைவியின் பிணம் என்று கூறிவிட்டான். போலீஸ் புலன் விசாரணையில், அந்தப் பெண் தன் பிறந்த வீட்டில் இருக்கிறதாகத் தெரியவந்தது! அவள் கணவன், தமது தவறை ஒத்துக்கொண்டான்!

இவ்வளவும் பம்பாய் மாகாணத்தில் நடந்ததாகச் செய்திகள் அறிவிக்கின்றன. ஏன் இந்தமாதிரி ஆச்சரியகரமான சம்பவங்கள் எல்லாம் நிகழ்கின்றன? தகப்பனுக்கு தன் மகளை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை! கணவனுக்கே தனது மனைவியைத் தெரிந்துகொள்ள முடியவில்லை! யாரைக் கேட்டால் இதற்கான விளக்கத்தைத் தருவார்கள்! கவியரசர் கம்பரைக் கேட்கலாம் என்று பார்த்தால், அவர் இறந்து போய் எத்தனையோ நூறுண்டுகள் ஆகிவிட்டன! இவர்கள், கம்பரசத்தில் இருக்கிறது **உண்டாட்டுப் படலத்தில்** வருகிற பாத்திரங்களோ அப்படித்தான் இருக்கவேண்டும்!

விவகாரம் பெரிது! விளம்பரம் பூஜ்யம்!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரடு சமர்ப்பிக்க இருக்கும் போர் தடுப்புத் திட்டத்தைக் குறித்து அமெரிக்கா கொண்டிருக்கும் நோக்கத்தை நன்கு அறிந்துகொள்வதற்கே இந்தச் சந்திப்பு என்றும் நம்பப்படுகிறதாம்.

இந்த விவகாரம் பெரியது—மிகமிகப் பெரியது. சந்திக்கும் இருவர்களும் சமானியர்கள் அல்ல. மேலும் போர் மூண்டு விடுமோ என்ற அச்சம் பிறப்பதற்கே மூலகாரணமாக இருப்பவர்கள். தொழில்வளத்தில்—நவீன போர்க் கருவிகள் செய்வதில்—இருநாடுகளும் ஒன்றுக்கு ஒன்று போட்டியிடக்கூடிய நிலையில் உள்ளவர்கள்தான். சோவியத் தயாரித்த அணுகுண்டு இருட்டடிப்பில் இருந்தவரையில், அமெரிக்காவின் தொனியில், இருக்க வேண்டியதைக் காட்டிலும் கொஞ்சம் கூடுதலாகவே அகம்பாவம் கலந்திருந்தது. சோவியத் அணுக்குண்டு அம்பலமானதும் அமெரிக்காவின் தனித்தன்மையுணர்ச்சி கரைய ஆரம்பித்துவிட்டது. அதன் அஞ்சாமை அகன்று, அச்சம் அந்த இடத்தைக் கப்பிக் கொண்டது. உள்ளத்திலே குழப்பம்—கருத்திலே கோளாறு—கண்களிலே கலக்கம்—அமெரிக்காவின் நிலை இது.

சோவியத் அணுக்குண்டார் அமெரிக்காவிலே இருக்கிறார். அவர் ஒத்துழைப்பு வேண்டும் உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமானால். அவருக்கு ஆடம்பர வரவேற்பில்லை! 'டாக்டர்' என்ற பட்டமளிப்பு விழா இல்லை! புகைப்படப் பிடிப்பில்லை! நிழல் படக்காட்சி இல்லை! ஊர் சுற்றிக்காட்டும் உபசாரம் இல்லை! விருந்தில்லை! வேடிக்கை இல்லை! கேளிக்கை இல்லை! விதவிதமான ஆட்டப்பாட்டங்கள் இல்லை!

போர் தொடுக்க ஆற்றலுடையவருக்கு இவ்வளவு பகட்டான வரவேற்புகள் இருந்திருக்க வேண்டியதுதான் அவசியம் என்பர் அனைவரும். ஆனால் சோவியத் வெளிநாட்டு மந்திரி விஷின்ஸ்கிக்கு, சாதாரண அளவு விளம்பரம் கொடுக்கக் கூட அமெரிக்கா விருப்பம் கொள்ளவில்லை.

இந்த வெறும் விளம்பரப் பகட்டால் எல்லாம் சோவியத் பிரதிநிதியை தம் வலையில் விழவைக்க முடியாது என்பதை அமெரிக்கச் சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரிந்து கொண்டு இருக்கிறது. விஷின்ஸ்கியும், விளம்பரத்திலே மோகங் கொண்டு, மனத்தை அரித்துக் கொண்டிருக்கும் விஷயத்தை பலியிட்டு விடமாட்டார். இந்த இருவர் நிலையையும் ஒருவர் ஒருவர் புரிந்துகொண்டிருக்கும் காரணத்தால்தான், வரவேற்புமில்லை—ஆடம்பரமும் இல்லை—விளம்பரம் கிடைக்கவில்லையே என்ற வேதனையும் இல்லை.

நமது வெளிநாட்டு மந்திரி விளம்பரம் பெற்றுவருகிறார் அந்த வெள்ளையர் சீமையிலே நல்லுறவு பெறவேயன்றி. குறித்த திட்டத்தின் வெற்றிக்காக என்று பிரதமர் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்யவில்லை. நாய்க்குட்டியொன்றோடு கொஞ்சிக் குலாவினதைக்கூட விடாமல் படம்போட்டுக் காட்டுகிறார்கள், விளம்பர வித்தையில் தேர்ந்துள்ள வெள்ளை விற்பனர்கள்! விளைவென்ன, ஐயா, இதனாலெல்லாம் இந்த நாட்டுக்கு? ஏழை மக்களின் உள்ளம் பூரிக்கலாம் இது கண்டு! மானத்தைக் காத்துக்கொள்ள மார்க்கம் கிடைக்குமா? உறைவிடத்திற்கான உதவி கிடைக்குமா? உபசாரம், அவரை உயர்த்துகிறது! பரம்பரைப் பரம்பரையாக பஜனை செய்து பழக்கப்பட்ட நமக்கு, நமது பிரதமருக்கு அமெரிக்காவிலே நடக்கும் திருவிழா, தித்திக்கத்தான் தித்திக்கும். சில நிமிஷம் வரையில்தானே இது! பிறகு பசிவந்திடுமே! இதனைப் போக்கப் பண்டிதர் என்ன கொண்டுவர இருக்கிறார் அமெரிக்காவிலிருந்து! இதைப் படிக்கட்டாகக் கொண்டுதான், பண்டிதரின் அமெரிக்க விளம்பரத்தை எடைபோட்டுப் பார்க்க வேண்டும். இந்த ஆராயும் பண்பாடு, மரியாதைக் குறைவின் விளைவல்ல. மக்களாட்சி முறையில் ஒவ்வொரு தனி நபருக்கும் கண்டிப்பாக இருந்திட வேண்டிய இன்றியமையாதத் தன்மையாகும்.

மறுமலர்ச்சித் தமிழகம் கண்டு 'பாஷ்யங்களின்' பரதவிப்பு!

வடமொழி ஆதிக்கத்தால் தமிழ் கெடாதென்று 'வீரபாஷ்யம்!'

தனித் தமிழில் இனிமை இல்லையென வெற்றுவேட்டு வரட்டு வாதம்!

'சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஆதரவு தருவதால் இதர மொழிகளின் வளர்ச்சி நசித்து விடுமெனக் கருதுவது தவறாகும். சமஸ்கிருத மொழியினை ஒரு குறிப்பிட்ட வகுப்பினருடன் மட்டும் சேர்த்துப் பேசுவது துரதிர்ஷ்டவசமானதாகும்" என்று முன்னாள் மந்திரிதோழர் கே. பாஷ்யம் திருவல்லிக்கேணியில் சமஸ்கிருதப் பண்டிதர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். சமஸ்கிருதத்தின் சிறப்பையும், 'செத்த நிலையிலும்' அதன் சிரிப்பையும் பற்றிப் பேசவந்த தோழர் பாஷ்யம் தனது கட்சியை மாசற்றவகையில் எவ்வளவு நிரம்பட எடுத்துக் கூறியிருக்கலாம். அதனை விடுத்து, பொருளற்றபுன்மொழிகளில் ஈடுபட்டுப் பொறுப்புள்ளோரின் நெஞ்சைச் சுட்டிருக்கிறார்.

'முன்னைப்பிருந்த நட்டோர் கொடுப்பின் நஞ்சம் உண்பர் நனிநாகரிகர்' என்ற பண்பில் இந்நாட்டவர் அந்நிய மொழி சமஸ்கிருதத்துக்கு அன்று தொட்டே இடமும் ஆதரவும் பெருந்த அளவில் நல்கி வந்திருக்கின்றனர். நாகரிக உலகுக்கான நற்கருத்துக்கள் இல்லாததோடன்றி நச்சுக் கருத்துக்கள் பல மலிந்திருந்தும் அவ்வடமொழிக்கு அளவிடற்கரிய ஆக்க உதவிகள் அளிக்கப்பட்டு வந்திருக்கின்றன. தங்களது சொந்த மொழி அலட்சியப்படுத்தப்படுமளவுக்கு, ஏன், சிதைந்து சின்னபின்னமாக்கப் பெறுமளவுக்கு, அந்நிய மொழி சமஸ்கிருதத்துக்கு ஆதரவளித்திருக்கின்றனர் இந்நாட்டவர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு சீரிளமைக் குன்றாது உயர்தனிச் செம்மை மொழியாக இருந்த நம் அருந்தமிழ் இன்று தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று பல கூறாகப் பிரிந்து கிடப்பதும், எஞ்சிய தமிழிலும் 100-க்கு 40, 50 என்று வடசொற்கள் விரவி நிற்பதுமே இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும்.

நிலைமை இவ்வாறிருக்க, வடமொழி வளர்ச்சிக்கான ஆதரவு 'கைங்கர்யங்கள்' எதிர்க்கப்படுகின்றன; எதிர்ப்பாளரின் மனோநிலை தவறு என்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும் என்று கேட்கிறோம். நாட்டுக்குரிய மொழிக்கு, நாட்டின் சொந்த மொழிக்கு, நாட்டவரின் தாய்மொழிக்கு—அருமைத் தமிழ்மொழிக்கு நியாயமாகத் தரவேண்டிய ஆதரவும், ஆக்கமும், ஊக்கமும் அளிக்கப்பெறவில்லையே என்று கோருதல் சமஸ்கிருதத்தைக் காய்வதாகுமா? எல்லா வகையிலும் ஏற்றம் பெறவேண்டிய இந்நாட்டு மொழியின் சிறப்பை சிதைக்கும் வகையில், அதற்கு அளிக்கவேண்டிய ஆக்கவுதவியின் பெரும் பகுதியை அயல் மொழிக்கு எடுத்துத் 'தாரை வார்த்தல்' முறையா என்று கேட்பது முறை தவறிய செயலா? 'உலக வழக்கழிந்தொழிந்த' ஒரு மொழிக்கு உயர்வாக உயிர் மொழியொன்றின் வளர்ச்சியைப் பலியிடுதல் நீதியா என்று வேண்டுவது தவறு?

சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஆக்கமளிப்பதால் இதர மொழிகள் சிதைந்துவிடாதென 'பாஷ்யந் தருகிறார்' பாஷ்யம் அய்யங்கார். சமஸ்கிருதத்துக்கு ஆக்கந் தருவதல்ல, அதன் நுழைவுக்கு அனுமதி தந்ததாலேயே நம் நாட்டு மொழி சிதைந்து சீரழிந்தது என்பதை வரலாறு காட்டுகிறது; மொழி நூல் விழிப்புத் தோன்றுமளவுக்கு எடுத்துணர்த்துகிறது. மொழித்துறையில் மட்டுமல்ல, கலை-நாகரிக-வாழ்க்கைத் துறைகளிலும் இந்நாட்டவரை இழிநிலைக்குக் கொணர்ந்துவிட்டது சமஸ்கிருதம் என்பதை நடப்புணர்ந்தோர் மறுக்கவோ மறைக்கவோ முடியுமா? எந்த மொழி நூலாராய்ச்சி முடிவின் கீழ் அல்லது வரலாற்றுத்துணை அடிப்படையின்கீழ் தோழர் பாஷ்யம் பேசுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

பாஷ்யமய்யங்கார் இத்துடன் நின்றாரில்லை; இன்னொரு படியும் மேலே சென்றுவிட்டார். தமிழ் ஆர்வங்கொண்டு தனித் தமிழ் நடையில் பேச்சு—எழுத்துக்களைத் திருப்பி வரும் இன்றைய மறுமலர்ச்சி தமிழகத்தின் போக்கு தோழர் பாஷ்யத்துக்குப் பிடிக்கவில்லையாம். தமிழின் இனிமையையும் எளிமையையும் குறைத்து விடுகின்றனராம் இச்செந்தமிழார்வலர்கள். இது கண்டு முதலைக்கண்ணீர் வடிக்கிறார் முன்னாள் மந்திரி. தமிழ் பேசுவோர் உள்ளத்தில் பீதியும் குழப்பமும் ஏற்படும் தன்மையில் நடந்து கொள்கின்றனர் தனித் தமிழ் இயக்கத்தாரென வேறு சாடியிருக்கிறார்!

"தென்னிந்தியாவில், செந்தமிழ் இயக்கத்தவர் மற்பலரும் தமிழுக்குச் சுற்றம்காண வேண்டுமென்ற ஆர்வத்தால், பலகாலமாக ஏற்றுக்கொண்டு வழக்கில் இருந்து வரும் 'சங்கம்' போன்ற சொற்களையெல்லாம் தடைவிட்டு விலக்கிவிடுகின்றனர். அது தனித் தமிழ்ச் சொல் அல்லவென்று கூறி, "கழகம்" போன்ற சொற்களைப் புகுத்துகின்றனர்,"

என்று கதறுகிறார் பாஷ்யமய்யங்கார். தமிழ்நாட்டில் தமிழரென்பர் தங்களுக்குரிய தமிழ் மொழியில் பேச முனைந்தால், தங்கள் இனத்தார் பிறரும் பேசவேண்டுமென்று விரும்பினால் அதனையாரே தடுக்கவல்லவர்? தங்கள் சொந்த மொழி நாளுக்கு நாள் வடமொழிக்கு ஆட்பட்டுவருவதைப்பார்த்து, அதனால் வாழ்வுக்கே மேலும் பங்கம் வருமென அஞ்சி, ஓரளவு உணர்வு பெற்ற மக்கள் மேற்கொள்ளும் இயல்பானமான போக்கே, பாஷ்யம் பாம்பனாருக்குத் தலைவலியாயிருக்குமானால், இந்நாட்டுக்குரியோராக இங்கு வதியும் இரண்டரை, மூன்று கோடி மக்களனைவரையும் கண்மூடி மௌனிகளாகி காட்டில் சென்று புதைந்தோ, கடலில் சென்று மாய்ந்தோ போகுமாறு விழைகிறாரா என்று கேட்கிறோம்.

தோழர் பாஷ்யம் மட்டுமல்ல, மந்திரி மாதவமேனனும்கூட அண்மையில் தனித்தமிழ் ஆர்வலர்களைப் புரைபொதி சொற்களால் தாக்கியிருக்கிறார். ஆட்சிப்படைக்க அதிகாரம் இருக்கிறது, தட்டிக் கேட்க ஆளில்லை என்பது தவிர இவர்களின் ஆணவ அகங்காரப் பேச்சுகளுக்கு வேறு எதுவும் பொருளிருப்பதாக நமக்குப் புலப்படவில்லை.

'ஜலம்,' 'தண்ணீர்' ஆவதற்கும் 'சாதம்,' 'சோறு' ஆவதற்கும் 'வேதாரண்யம்,' 'மறைக்காடு' ஆவதற்கும், 'விருத்தாசலம்,' 'பழமலை' ஆவதற்கும் 'சங்கம்,' 'கழகம்' ஆவதற்கும் கண்ணீர் வடிக்கும் இக்கருணையாளர்கள் நீரும் சோறும் மறைக்காடும் பழமலையும் கழகமும் இன்னபிறவுமே பண்டைத் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்த சொற்களாய் இருக்க, தூய தனித் தமிழ்ச் சொற்களாயிருக்க, அவை இடையில் ஏன் ஜலமும், சாதமும், வேதாரண்யமும், விருத்தாசலமும், சங்கமும் இன்னபிறவாயும் ஆயின, மாறின—இல்லை, மாற்றப்பட்டன—என்பதற்குக் காரணம் தருவார்களா என்று கேட்கிறோம். வழக்கில் இருந்த கன்னற்ற இன்றமிழ்ச் சொற்கள் சமஸ்கிருத சாயல்பெற, கலப்புபெற சூது-சூழ்ச்சி செய்தது, யார், ஏன் என்பதை இன்றைய 'பாஷ்யக்காரர்கள்' கூறட்டுமே.

'திருமணம்' என்ற சொல் நடமிட்டிருந்த இடத்தில் 'கலியாணம்' என்ற சொல்லைக் கட்டிப் பாடாய்க் கங்கணங் கட்டிப் புகுத்திவிடுவது பின்னர் மக்கள் மதி தெளிந்து பழைய சொல்லாகிய 'திருமணத்தை'க் கையாளும் போது கடிவதா—காய்வதா? அறிவோ வாதமோ ஏற்றுக்கொள்ளக்கூடியதா இவர்களின் கோணல் கூற்றுக்கள்?

ஒன்று கூறுவோம். இது மறுமலர்ச்சிக் காலம். மக்கள் உணர்வு பெற்றுவிட்டக் காலம். நச்சுக் கருத்துக்களுக்கோ, நயவஞ்சக நடிப்புகளுக்கோ இனி இங்கு இடமில்லை. உரம்பெற்று சுற்றிக்கொண்டிருக்கும் மறுமலர்ச்சிச் சக்கரத்தில் பாஷ்யம் போன்றோர் தலையைக் கொடுத்துவிட்டுப்பிறகு இடர்ப்பட வேண்டாமென்பதே நமது எச்சரிக்கை.

இனி நடப்பவை

பொன்னிறை—இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழாப் பொதுக்கூட்டம், 6-11-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு ஆலத்தம்பாடி புகைவண்டி நிலையத்திற்கருகில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருவள்ளூர்—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா 6-11-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு இவ்வூர் இராமணியார் சத்திரத்தில் நடைபெறும். அதுபோது தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஆம்பூர்—இவ்வூர் வ. உ. சிதம்பரனார் மைதானத்தில், 20-11-49 ஞாயிறு மாலை 6-மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டமொன்று நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ, மா. இளஞ்செழியன் எம். ஏ; ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோவை—இந்நகர தி. மு. க. கிளையின் செயற்குழுக்கூட்டம், 5-11-49 மாலை 6 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். செயற்குழுவினரனைவரும் தவறாது அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை—சென்னை மயிலாப்பூர் தி. மு. கழகக்கிளையின் செயற்குழு சிறப்புக் கூட்டம் 5-11-49 சனி இரவு 7-30 மணிக்கு நடைபெறும். இடம்:—மயிலை, அரங்கநாதபுரம் வீதி 1/10 எண்ணுள்ள இல்லம். உறுப்பினரனைவரும் தவறாது அழைக்கப்படுகிறார்கள்.

காங்கிரஸ் கரைகிறது எனவே கர்ஜனை புரிகின்றனர்

தஞ்சையில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி

தஞ்சாவூர், அக். 31—
தஞ்சாவூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இன்று திலகர் திடலில் நடத்தப்பட்ட மாபெரும் மூன்றுவது கூட்டத்திற்குத் தோழர் சி. பி. சிற்றரசு தலைமைவகித்து, பெரியாரை விட்டுக் கண்ணியமாக விலகி, தனிக்கட்சி அமைத்ததைப் பற்றிப் பேசினர்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அடுத்துத் தோழர் ஆசைத்தம்பி பேசினர். அதன் சுருக்கம்:—'திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியதற்குப்புறம் அரசியலாரின் கண்ணோட்டம் அதிகரித்திருக்கிறது. சாதாரண காங்கிரஸ்காரனில் இருந்து, காமராஜா வரை நம்மைப்பற்றி கண்டபடி பேசுகிறார்கள். மந்திரிகள் எவ்வளவு மட்டரகமாகப் பேசவேண்டுமோ அப்படிப் பேசுகிறார்கள் அதற்கு உதாரணம் மறைமலை அடிகளை கனம் மாதவமேனன் பைத்தியக்காரர் என்று கூறியதே போதுமானதாகும். போதாக் குறைக்குக் கனம்பக்தவத்சலம் இப்போது தோன்றியிருக்கிறார். பைத்தியக்காரன் பின்னால் பத்துபேர் திரிவதைப் போலவே நமது கூட்டங்களுக்கு ஆள் சேருகிறதாம். இப்படி மந்திரி பேசுவதைக்கண்டு நாம் கவலைப்பட வேண்டியதில்லை! ஏனெனில் நமது கூட்டங்களிலே ஆயிரம் ஆயிரமாக மக்கள் கூடுகிறார்கள். ஆனால் காங்கிரஸ் கூட்டத்தில்கான் மந்திரி கூறுகிறபடி உள்ள எண்ணிக்கை எங்கும் இருக்கிறது.

காமராஜர் கர்ஜனை

காங்கிரஸ் கரைந்து வருவதை அவர்களும் நன்கு உணர ஆரம்பித்துவிட்டார்கள். அதனாலேயே இந்த வருடம் காங்கிரசுக்கு நாலணா இல்லாதபடியே அங்கத்தினர்கள் சேர்க்க ஆரம்பித்துவிட்டார்கள். அடுத்த ஆண்டு ஒவ்வொருவருக்கும் நாலணா இனாமாகக் கொடுத்து சேர்த்தாலும் சேர்ப்பார்கள்! நம்மைப் பற்றி கேவலமாகப் பேசிவிட்டால் காங்கிரசைக் காப்பாற்றிவிடலாம் என்று காமராஜர் கர்ஜனை புரிகிறார் ஒவ்வொரு ஊரிலும்.

பாவம், பம்பரம்

காமராஜர் நம்மைப்பற்றி மிக இழிவாகப் பேசுவதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை, ஏனெனில் இயற்கையில் அவர் நல்லவர்தான. காங்கிரஸ், வடநாட்டுப் பிடிப்பு ஆகிய இருவரின் சேர்க்கையால் இப்படிப் பேசுகிறார். இன்றைய நிலையில் அவர் ஓர் பம்பரம். சாட்டைக்கு ஏற்ப அவர் ஆடுகிறார். அது அவர் குற்றமில்லை எனவே சாட்டையைத்தான் நாம் ஒரு கைப் பார்க்கவேண்டும்.

அடக்குமுறை

நம்முடைய வளர்ச்சி அவர்கள் வீழ்ச்சி எனவேதான் எந்தச் சூழ்ச்சி செய்தாகிலும் நம்மை ஒழிக்க முடிவு கட்டிவிட்டார்கள். கம்யூனிஸ்டுகள் மீது பலாத்காரக் குற்றம் சாட்டி அவர்களை ஒழித்தது போல் நம்மீதும் குற்றஞ் சாட்ட எண்ணுகின்றனர். அதைத் திருச்சி சம்பவமே எடுத்துக் காட்டுகிறது. கருப்புச் சட்டைக்காரர்களைப்பற்றி காமராஜர் திருச்சியிலே பேசிக்கொண்டிருக்கும் போது வெடிகுண்டு வீசப்பட்டதாம். இப்படி விஷமத்தனமாகப் பிரசாரம் செய்து விட்டால் நாம் பலாத்கார வாதிகளாகி விடுவோமா? இத்தகைய கூற்று இந்தக் காலத்திலே நிலைக்குமா? ஏன் நிலைத்தது? வெடித்தது வெடி குண்டல்ல, பட்டாசு என குட்டு வெளிப்பட்டு விட்டதே. புத்தகம், பத்திரிகை, கூட்டம், நாடகம் ஆகியவைகளைத் தடைசெய்து விடுவதால் மக்கள் உணர்ச்சியை அடக்க முடியுமா? சமுகக் கூட்டத்தைத் தடுக்கத் தடுக்க ஒவ்வொரு வீட்டுத் திண்ணையும பிரச்சார மன்றமாகிவிடும என்பதை அரசாங்கம் உணரட்டும். அது மட்டுமல்ல, அடக்கு முறையை வீசுபவர்கள்தான இதுவரை அழிக்கப் பட்டிருக்கின்றனர்!

நாம் கட்டுப் பாடான கட்சியை அமைத்துவிட்டால் நம்மை யாரும் அலட்சியம் செய்யமுடியாது. கட்சி பலம பெறுவது உங்கள் கையில் தான் இருக்கிறது. உங்கள் பங்கை உடனே முடியுங்கள். வெற்றி நமதே."

என்பதாகப் பேசி முடித்து, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னார். பின்பு தோழர் டி. கே. சீனிவாசன் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பிறகு செயலாளர் நன்றி நவில, கூட்டம் இனிது முடிந்தது.

அது எப்படி இருக்குமோ?

பிரசாத் பயமுறுத்துகிறார்!

"ராமராஜ்யம் இன்னும் தொலைவிலேயே இருக்கிறது. காங்கிரசாரின் வேலை முடிந்துவிடவில்லை. சுயராஜ்யம் வந்தது ஒரு பகுதி வேலை முடிந்தது. இன்னொரு பகுதி ராமராஜ்யம் நிலைநாட்டத்தில் இருக்கிறது. அதற்கு ஆவன செய்வோமாக" என்று அரசியலமைப்பு சபைத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் ராஞ்சி-காந்தி நகரில் காங்கிரஸ்காரர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'சுயராஜ்ய' சுவையில் சொக்கிக்கிடக்கும் இவ்வுபகண்டமக்களுக்குப் பிரசாதின் 'ராமராஜ்ய'ப் பல்லவி 'சமூர்த்தி' நிலையினைத்தான் உண்டாக்கும் என்று எதிர்பார்க்கலாமா?

சரியெனப் பட்டதைத் துணிவுடன் கூறவேண்டும்

பத்திரிகையாளர் நாட்டைத் திருத்தும் நன் மக்கள்

பத்திரிகையாளர் கூட்டத்தில் பண்டித மிஸ்ரா பேச்சு

"பத்திரிகையாளர்கள் மிகப் புனிதமான ஒரு கடமையை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முற்கால ரிஷிகளைப்போல் சமுதாயத்தைச் சீர்திருத்தி, நாட்டை நன்னிலையடையச்செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்கள். நாட்டின் எதிர்காலத்தை ஆக்கவும், அழிக்கவும் வல்லவர்கள் பத்திரிகையாளர்களே. ஆகையால் அவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டும். யாருக்கும் அஞ்சாமல் நடுநிலை நின்று நல்லதைச் சொல்லவேண்டும்."

என்று மத்திய மாகாண விளம்பர அமைச்சர் பண்டிட் டி. பி. மிஸ்ரா அவர்கள் ஜபல்பூர் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசியிருக்கிறார்.

அருமையான உபதேசம். ஒரு பத்திரிகையாளர் மாநாட்டிலே பேசவேண்டிய மிக மிக அவசியமான பேச்சு. அமைச்சர் மிஸ்ரா அவர்களின் இந்த அழகான, கருத்தாழமுடைய பேச்சு, இந்த நாட்டிற்கு இப்போதைய நிலையில் மிக மிக இன்றியமையாததாகும். எந்தக் கருத்தை தோழர் மிஸ்ரா வலியுறுத்திக் கூறுகிறாரோ அந்தக் கருத்து நிறைவேற மார்க்கமுண்டா என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாட்டைச் சீர்திருத்தும் நன்மக்கள் பத்திரிகையாளர்களே என்பதைச் சுட்டிக் காட்டி அவர்கள் எதற்கும் அஞ்சாமல் நடுநிலைநின்று, தமக்குச் சரியெனப்பட்டதைத் துணிவுடன் கூறவேண்டும் என்கிறார்:

அமைச்சர் சுட்டிக்காட்டும் நடுநிலைமையும் துணிவும் இந்த நாட்டில் எந்த அளவு பயனளித்திருக்கிறது என்பதுதான் கண்டு நாம் கவனிக்கவேண்டிய விஷயம். நமது காருண்யமிக்க காங்கிரஸ் ஆட்சியில் எதிர்கட்சிக்காரர்களுடைய கருத்து பயமின்றி நடமாட முடியவில்லை. யார் மாறுபட்டக் கருத்தைத் தெரிவித்தாலும் அவை யெல்லாம் துவேஷப் பிரச்சாரம் என்ற பட்டியலில் சேர்க்கப்படுகின்றன மாற்றுக்கட்சியார் கூறும் கருத்துக்களைக் கேட்டுத் தம்மைத் திருத்திக் கொள்ளும் பண்பாட்டை இந்த அரசாங்கம் அறவே இழந்து விட்டது.

எடுத்ததற்கெல்லாம்பாதுகாப்புச் சட்டங்களும், அவசரச்சட்டங்களும், கையாளப்படுகின்றன. எதிர் கட்சிக்காரர்கள் எடுத்துக்கூறும்நல்லகருத்துக்களும், அவற்றை விளக்க அவர்கள் கையாளும்நடுநிலை வாதங்களும் இந்த ஆட்சியாளரைப் பயமுறுத்துகின்றன. நல்ல கருத்துக்களைக் கேட்கும் நாட்டு மக்கள் எங்கே தங்களுடைய பொல்லாத போக்கினை கண்டு கொள்வார்களோ என்ற ஐயமும், அச்சமும் ஆட்சியாளரைப் பிடித்தாட்டுகிறது. பாம்பைக்கண்டவர்கள் போல் பதறித்துடிக்கின்றனர். எனவே (153)A சட்டம், எடுத்த பாணத்தை தொடு எழுத்தாளர் மீது அதனை என்கின்றனர். எழுத்தாளர்களுமாத்திரமல்ல இந்த நிலை. அவர்களுடைய எழுத்தை அடிக்கும் அச்சகத்தார், பதிப்பிடும் பதிப்பகத்தார் ஆகிய அனைவரையும் சட்டத்தைக்காட்டி மிரட்டுகின்றனர். ஆயிரம் ஆயிரமாக ஜாமீன் கேட்கின்றனர்.

இப்படிப்பட்ட நிலை நீடித்துக் கொண்டே போனால் அமைச்சர் மிஸ்ராகூறும் அறிவுரையால்என்ன பயன் விளையக்கூடும்? கருத்தாளர் எங்ஙனம் எழுத்தாளராக முடியும்? நடு நிலை வாதத்தாரத்துக்கே இடமில்லாமல் நடுக்கம் நிலவுமானால் எங்கிருந்து நன்மை விளையக்கூடும்! எழுத்தாளர் தமக்குச் சரியெனப் பட்டதை எங்ஙனம் துணிவுடன் எடுத்துக்கூற முடியும்?

இங்ஙனம் சட்டத்தைக்காட்டி மாற்றுக்கட்சியாரின் கருத்துக்களை மங்கச்செய்யும் இந்த மகத்தான செயலுக்கு அரசியலார் சொல்லும் சமாதானம் என்னவென்றால், அவையெல்லாம் துவேஷத்தை வளர்க்கக்கூடியன என்பதேயாகும். அரிய உபதேசம் செய்த அமைச்சர் மிஸ்ரா கூட தமது பேச்சின் பிற்பகுதியில் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இங்ஙனம் 'துவேஷம்' என்ற ஒரு சொல்லைக் காட்டி அரசியலார் உண்மையை மறைக்கப் பார்க்கின்றனர். இது கூடாது என்கிறோம் நாம். குற்றம்சாட்டப்பட்டால் அதற்குரிய விளக்கம் தர வேண்டும். மறுப்பு வெளியீடுகள் வெளியிட வேண்டும், விவாத மேடைகள் அமைத்து அவற்றின் மூலம் நாடு உண்மையை உணரும்படிச் செய்ய வேண்டும். இதுதான் ஜனநாயக முறை. ஜனநாயகம் பேசும் அரசியலார் இதனைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதை விடுத்துஎத்தனைமிஸ்ராக்கள் கூடி எழுத்தாளர் கடமைபற்றி எவ்வளவுதான் பேசினாலும்பயனில்லை.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

5—11—49

- அறந்தாங்கி :— ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், என். எஸ். இளங்கோ.
- குமரமங்கலம் (சேலம்) :— ஜி. என். இராஜு

6—11—49

- பொள்ளாச்சி :— (மாலை 6-மணி) சி. என். அண்ணாத்துரை, பி. பழனிச்சாமி, எஸ். வி லிங்கம், ஈ. வெ. கி. சம்பத்
- ஆனைமலை :— (இரவு 9-மணி) சி. என். அண்ணாத்துரை, எஸ். வி.லிங்கம், ஈ. வெ, கி. சம்பத்
- திருவள்ளூர் :— இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கல்யாணசுந்தரம்
- மதுரை :— என். எஸ். இளங்கோ, எம். அய்யாசாமி, எஸ். முத்து
- புரசைபாக்கம் (சென்னை) :— க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், கே. கோவிந்தசாமி, டி.எஸ், வேலன்
- பொன்னிறை :— ஏ. வி பி. ஆசைத்தம்பி, டி. கே சீனிவாசன்

7—11—49

- திருப்பூர் :— (காலை-நஞ்சப்பா உயர்நிலைப் பள்ளி, சி. என். அண்ணாத்துரை
- கோவை :— (மாலை-கல்லூரி ஆங்கிலப்பேரவை) சி. என். அண்ணாத்துரை
- சென்னிமலை :— இரவு 7-30-மணிக்கு சி. என். அண்ணாத்துரை, ஈ. வெ. கி. சம்பத்
- பேராவூரணி :— ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி நடராசன், என். எஸ். இளங்கோ

செக். நாட்டில் மதக்குருமார் அவலம்!

சர்க்கார் கையில் மூக்குக் கயிறு!

செக்கோஸ்லோவேக்கியாவி லுள்ள சர்ச்கள் (மாதாகோவில்கள்) அனைத்தினுடையவும் சொத்து—நிதி—நியமன நிர்வாகங்களனைத்தையும் நவம்பர் 1-ந் தேதியன்று செக்சர்க்காரே ஏற்றுக் கொண்டுவிட்டது.

இனி குருமார்களின் நடவடிக்கைகளனைத்தும் சர்க்காரின் கண்காணிப்பின் கீழ்வந்து விடுகிறது. பிஷப்களின் விடுதிகள், மாளிகைகள் இன்னபிறவற்றை நாட்டுப் பொதுநலத்தின் பெயரில் கைப்பற்றவும் சர்க்காருக்குச் சட்டபூர்வமாக அதிகாரம் கிடைத்து விடுகிறது. மேற்படி மாதாக்கோயில் சாமிகளுக்கு இனிமேல் சர்க்கார் நிர்ணயிக்கும் சம்பளம்மட்டுமே கிடைத்து வரும்.

திருத்தம்

மாலை மணி (சென்னை) 3-11-49 (வெளியூர்) 4-11-49 இதழின் 4-ம் பக்கத்தில் "அண்ணா மீது வழக்கு" என்ற தலைப்பில் வந்திருக்கும் செய்தியில் இ. பி. கோ 151 (A) என்றிருப்பதை இ. பி. கோ 153 (A) என்று திருத்திப்படிக்கும்படி கோருகிறோம்.

(ஆ-ர்)

நாகை வெளிவையில் வெள்ளம் போல் மக்கட் கூட்டம்

கொள்கைக்காகவே வாழ்ந்தோம்-கொள்கைக்காகவே பிரிந்தோம்

கழகத் தோழர்கள் முழக்கம்

நாகப்பட்டினம், அக். 31—

திராவிட முன்னேற்றக் கழகம்—நாகை நகரக் கிளையின் பொதுக்கூட்டம் 30—10—49 ஞாயிறு மாலை 6-15 மணிக்கு வெளிப்பாளையம் அவுரித் திடலில், வெள்ளம் போன்ற மக்கட் கூட்டத்தின் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், தோழியர் இராமாமிர்தத்தம்மையார் ஆகியோரை கழகத்தின் முகவர்கள் புகைவண்டி நிலையத்திற்கு அன்று விடியற்காலையில் சென்றிருந்து, வரவேற்று, கழகக் கட்டிடத்திற்கு அழைத்து வந்தனர். தோழர் எஸ். வி. லிங்கம் அவர்களும் உடன் வந்திருந்தார்கள். கழகக் கட்டிடத்தைப் பார்வையிட்டு, கழகத் தோழர்களின் அரும் முயற்சியைப் பலபடப் பாராட்டி, வியந்து கூறினார்கள். பின்னர் அவர்களெல்லோரும் நாகை வெளிப்பாளையத்தில், தலைவர்கள் தங்குவதற்கென்று தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். உள்ளூர் வெளியூர்களிலிருந்து வந்த கழகத் தோழர்கள் பேச்சாளர்களைக் கண்டு கழக சம்பந்தமான பல்வேறு திட்டங்களைப் பற்றியும் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவுரித் திடலின் பரந்த வெளியில் மேடை அழகுற அமைக்கப்பட்டிருந்தது. இரு வண்ணக் கொடிகள் இரண்டு பெருங் கம்பங்களில் பெருமிதமாக அசைந்துகொண்டிருந்தது. போவார் வருவாரை "வன்மின், வன்மின்" என்று அழைப்பது போல் காணப்பட்டது. மேடையின் முன்புறத்தில் வளைவு அமைக்கப்பட்டு அதில் சரம்போல் சிறிய மின்சார பல்புகள் இணைக்கப்பட்டிருந்தன.

மாலை 5-மணியிலிருந்தே ஏராளமான மக்கள் திடலை நோக்கி நடந்தவண்ணம் இருந்தனர். தோழர் பாடமையன் முன்மொழிய, தோழர் இராதாமணாளன் வழி மொழிய தோழியர் மூவலூர் ஆ. இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள். முதற்கண் அய்வநல்லூர் தோழர் ஒருவரால் திராவிட நாட்டுப் பண் இனிய முறையில் பாடப்பெற்றது.

இராமாமிர்தத்தம்மையார்

தோழியர் இராமாமிர்தத்தம்மையார் முன்னுரையாக, தாம் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பது இதுதான் முதல் தடவை என்றும், முப்பது ஆண்டுகளில் எந்தக் கூட்டத்திற்கும் தலைமைவகித்ததில்லை என்றும், அந்தப்பெருமையை நாகை தமக்களித்திருக்கிறது என்றும், பெரியாரின் பொருந்தாத் திருமணம் பெண் குலத்திற்கே பெரும் இழிவைத் தருகிறது என்றும், பெரியார் பெண் சமூகத்தின் விடுதலைக்குப் பாடுபட முனைந்த காலந்தொட்டு அவர் இட்ட வேலையைத் தாம் திறம்படச் செய்து முடித்திருக்கிறேன் என்றும், திருச்சியிலிருந்து சென்னை வரையில் ஆந்தி எதிர்ப்புப்படையில் சேர்ந்து கால்நடையாகச் சென்றும், பொதுவாழ்க்கையில் பலகாலமாகப் பணி புரிந்தும் வந்த தாம் கட்சியை நடத்த எவ்வகையில் தகுதியில்லை என்று பெரியார் கூறிட முடியுமென்றும், பொருந்தா — வாரிசு— திருமணம் செய்துகொண்ட பிறகு அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்ளத் தமது தூய்மை உள்ளம் இடந்தரவில்லை என்றும், ஆகவேதான் குற்றமற்ற உள்ளம் படைத்தோர் கூடி உருவாக்கிய முன்னேற்றக் கழகத்தில் தாம் சேர்ந்து தொண்டாற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் விரித்துக்கூறி பெண்களுக்குச் சமுதாயம் இழைக்கும் கொடுமைகளை இறுதியில் விளக்கிக் கூறுவதாகக் கூறினார்கள்.

ஈ. வெ. கி. சம்பத்

அடுத்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசினார். தோழர் சம்பத் பேசும்போது பெரியாரின் திருமணம் காரணமாகக் கழகம் இருமுகாம்களாகப் பிரிந்து விட்டன என்றும், சென்ற நான்கு மாதங்களாக நடந்த வாதப் பிரதிவாதங்களை ஊன்றிக் கவனித்து வந்துள்ள கழகத் தோழர்கள் எந்த முகாமில் தாங்கள் சேர்ந்து இனிப்பணியாற்றுவது என்பதைத் தீர யோசித்து ஒரு முடிவுக்கு வந்து அதன்படி வேலைசெய்யவும் முனைந்து விட்டார்களாதலால், இனி அவைகளைப் பற்றிக் கழகத் தோழர்களுக்கோ, பொதுமக்களுக்கோ விளக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன் என்றும் கூறி, அரசியல் நிலையைப் பற்றிப் பேசத் தொடங்கி, காங்கிரஸ் ஆளவந்தார்களின் திட்டமற்ற போக்கையும், வரவு-செலவு முறைகளில் கையாளும் இழிதகைமையும், நேருவின் அமெரிக்கப் பயணம் எவ்வளவு வெளிப் பகட்டுக்காக ஏற்பட்டதாக அமைந்திருக்கிறது என்பதையும், அரசாங்கத்தின் உணவு உற்பத்தித் திட்டம், கல்வி அபைச்சரின் பிற்போக்கு வாதங்கள் ஆகியவைகளைப் பற்றியும், உணர்ச்சியுடன் 1½ மணி நேரத்திற்கு மேலாகப் பேசினர்.

இரா. நெடுஞ்செழியன்

அடுத்துத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசினார்கள். அவர் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் தலைவரின் போக்கால் ஏற்பட்ட வேதனையின் வழியாக உருவாக்கப்பட்ட அரிய முடிவாகும் என்றும் கொள்கைக்காகவே கழகத்தில் பலரும் சேர்ந்தோம், கொள்கைக்காகவே வாழ்ந்தோம் அக்கொள்கைக்காகவே பிரிந்து வேறு கழகம் கண்டோம் என்றும், திராவிடர் கழகத்திலே தாம் கடைப்பிடித்திருந்த இலட்சியங்களை, அதாவது அரசியலிலே திராவிட நாட்டுப் பிரிவினை காணுதல்-பொருளாதாரத்திலே சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதியை எல்லோரும் பெறும்படி செய்தல்-சமுதாயத்தில் உயர்வு-தாழ்வு என்றதை அறச்செய்து மனிதனை மனிதன் என்று மதித்து வாழும் இன்பவாழ்வினை உண்டாக்குதல். ஆகியவைகளைத் தி. மு. கழகத்திலும் இலட்சியங்களாகக் கொண்டுள்ளோம் என்றும், திராவிடர் கழகத்தில் கையாளப்பட்ட கறுப்புச் சட்டை போடுதல் போன்ற திட்டம், கொடி, அமைப்பு முறை, சர்வாதிகாரத் தன்மை ஆகியவை தி. மு. கழகம் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை என்றும், நாட்டு மக்களுக்கு உண்மை நிலையை உரைத்திட, நாட்டில் உலவும் அரசாங்கத்தின் எதிர்க்கட்சியாக இருப்பது தி. மு. கழகமேயாகும் என்றும், பதவிப் பிடிப்பு இதன் கொள்கை அல்லவென்றும், அறிவுப் புரட்சியை மக்களிடம் உண்டாக்குவதே கழகத்தின் முக்கிய நோக்கமென்றும், திட்டம் சரியானபடி வகுத்துக்கொள்ள அரசாங்கத்திற்கு வகையில்லாத காரணத்தாலேயே பல குற்றங்குறைகள் ஆட்சிமுறையில் ஏற்பட்டிருக்கின்றனவென்றும் எடுத்துக்கூறி மேலும் பல பல விஷயங்கள்பற்றி விளக்கமாகவும், விரிவாகவும் கூறினார். கூட்டத்தில் கேட்கப்பட்ட சுமார் பதினைந்து கேள்விகளுக்குத் தெளிவான முறையில், உண்மை நிலையை விளக்கி, அழகுபடக் கூறினார். கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது, மக்கள் இடையிடையே நகைப்பொலி செய்தும், கைகொட்டியும் கேள்விகளின் தெளிவில்லாத போக்குக்கு ஏளனம் காட்டினர்.

தலைவர் தோழியர் இராமாமிர்தத்தம்மையார் முடிவுரை கூற, தோழர் ராதாமணாளன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு தூய்மையான உள்ளத்தோடு, நாணய, பொறுப்பு, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகிய கடமையுணர்ச்சிகளோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பேசுகின்ற கூட்ட சொற்பொழிவுகளைக் கேட்டவர்கள் நன்கு உணர்ந்து, பெருத்த ஆதரவு தருவதை விலை மதிப்புச் சொண்ட உள்ளத்தோடு செய்தனர் என்னலாம். (வி-உ)

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

மதுரை

மதுரை, அக் 25—

திராவிட முன்னேற்றக் கழக மதுரை நகரக் கிளையின் துவக்க விழாப் பொதுக்கூட்டம், மனமகிழ்ச்சி கொள்ளவும், சிறப்பும் ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டு தழுவுமான முறையில், மிகச் சிறப்புற 16-10-49-ல் மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மதுரை தி. மு. க. நகரக் கிளையின் செயலாளர் தோழர் எம். அய்யாசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மைதானம் பூராவும் பரவியிருந்து கூட்ட நடவடிக்கைகளைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். கல்லூரி மாணவர்களும், பள்ளி மாணவர்களும் பெருவாரியாகக் கலந்துகொண்டு கூட்டத்திற்குத் தனிச் சிறப்பைக் கொடுத்தார்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பின்னர் தோழர்கள் கலியபெருமாள், கே. எஸ். ராஜமான், எஸ் முத்து ஆகியோர் பேசினார்கள். அடுத்து திருச்சித் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி உணர்ச்சியும், நகைச்சுவையும் ததும்ப சுமார் 2 மணி நேரம் அரியதோர் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்தினர், இடையிடையே கையொலி செய்தும், சிரித்தும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

அன்று காலையில், கீழமாசி வீதி, அழகரடி, சந்தைப் பேட்டை, தெற்குவாசல், சப்பி மணிபுரம், மேற்கு வட்டம் ஆகிய பகுதிகளில் தி. மு. கழக இருவண்ணக் கொடிகள் ஏற்றப்பட்டன. (செ-ர்)

அய்வநல்லூர்

(நாகப்பட்டிணம்)

29—10—49 சனிக்கிழமை மாலை 6 30 மணிக்குத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் கழகச் செயலாளர் வி. எம். வேலு தலைமையில் நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் வர முடியவில்லை என்று தந்தி வந்ததும், தோழர்கள் ஜி ராதாமணாளன், பாண்டியன், பெருமாள் இவர்கள் பேசியவுடன் தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

தஞ்சை

தஞ்சை 21-10-49 வெள்ளி மாலை 6 மணிக்குத் தஞ்சை நிலக் கோட்டையில் பொன்மலை தோழர் ஜி. பாலகிருஷ்ணன் தலைமையில் முன்னேற்றக்கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் எஸ். எஸ். மணி, என். வி. நடராசன் பேசிக்கொண்டு இருக்கையில் மழை வந்து விட்டதால், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பேச முடியாமற் போய்விட்டது. கேள்விகளுக்குப் பதில் கொடுக்கப்பட்டது நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

ஆனைமலை

ஆனைமலை, அக் 30—

29—10—49 சனியன்று மாலை 6 30 மணிக்கு சின்னக்கடை வீதியில் சுப்பையா காபிக் கடைக்கருகில் துவக்கவிழா நடைபெற்றது. அது சமயம் ஏ. வி. எம். சாமி அவர்கள் வேட்டைக்காரன் புதூர் திராவிட முன்னேற்றக் கழக நிதி உருப்பினர் தோழர் வி. எ. முத்து மாணிக்கம் அவர்களைத் தலைமை வகிக்கும்படி முன் மொழிய மாணவர் திராவிட முன்னேற்ற கழகச் செயலாளர் தோழர் ஏ. வி. அன்வர் பின்மொழிய முத்து மாணிக்கம் அவர்கள் தலைமை ஏற்று திராவிட முன்னேற்ற கழகம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பதை விளக்கிக் கூறினார். பிறகு இனத்தாசன் அவர்களை பேசும்படி கேட்டுக்கொண்டார். இனத்தாசன் அவர்கள் இயக்க கொள்கைகளை சிறிது நேரம் விளக்கிப் பேசினார். அடுத்துத் தோழர் சீனிவாசன் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தினால்தான் பெரியார் ராமசாமியின் பெயர் சரித்திரத்தில் இடம் பெறும் என்கின்ற அரிய விஷயம் பற்றியும், நாம் இன்று அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய துறைகளில் ஏன் சீர்கேடு அடைந்து உள்ளோம் என்பது பற்றியும் மிக விரிவாகப்பேசி முடித்தார். வி. எ. முத்து மாணிக்கம் அவர்கள் தலைவர் முடிப்புரையில் திராவிட முன்னேற்ற கழகக் கொள்கைகளை ஆதரிக்கும்படியும் ஜனநாயகம் பிரகாரம் நடைபெறும் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்றும் கூறி முடித்தார் ஏ. வி. எம். சாமி நன்றி கூறக் கூட்டம் 10-மணிக்கு முடிவடைந்தது.

[செ—ர்]

சந்தா

[வெளி நாடு]

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர், "மாலைமணி"

விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம் ரூ5—0—0

நீண்ட கால ஒப்பந்தவிளம்பரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம்

பொது உறுப்பினர்கள் கூட்டம்

கொழும்பு, அக். 25—

சென்ற 1:—10—49 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இலங்கை திராவிடர் கழக நிர்வாகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களையும், இலங்கை திராவிடர் கழக அங்கத்தினர் முன் சமர்ப்பித்து, கழக உறுப்பினர்களின் அனுமதியைப் பெற வேண்டும், 3-வது தீர்மானப்படி இலங்கைத் திராவிடர் முன்னேற்றக் கழக எதிர்கால அமைப்பைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்ய வேண்டியும் 23—10—49 ஞாயிறு பிற்பகல் 4-30 மணியளவில், கொழும்பு ஆட்டுப்பட்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னரே நகரின் பலபாகங்களிலிருந்தும், கழக உறுப்பினர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள் எல்லோரும் திரளாய் வந்து மண்டபத்தில் நிறைந்திருந்தனர்.

சரியாய் 4-30 மணிக்கு இலங்கை திராவிடர் கழகத் துணைத் தலைவர் தோழர் சு. கா. சுந்தரராசன் அவர்களும் மற்றும்பல கழக முக்கியஸ்தர்களும் மேடை வந்தடைந்தனர்.

பின்பு தோழர்கள் எஸ். மன்னர் மன்னன். கே. எஸ். மூ-மனமஸ்தான் ஆகியோர் இனிய குரலில் திராவிட நாட்டுப்பண் பாடினர்.

பின் தலைவர் தமது தலைமையுரையில் இக்கூட்டத்தின் நிலைமையை விளக்கிப் பேசுகையில், தலைவர் பெரியாரின் திருமணச் செய்தி கேட்டு இலங்கையிலே வசிக்கும் திராவிட மக்களாகிய நாம் திகைத்திட்டுப்போனோம். எதிர்க்கட்சிப் பத்திரிகைகளின் விஷமப் பிரச்சாரம் என எண்ணினோம். மூலஸ்வதாக; பின்னர் சகிய வின விஷயங்கள் முழுமையும்; அதனால் ஏற்பட்ட சூழ்நிலைமையும், இலங்கை திராவிடர் கழகத்தாராகிய நாம் கூர்ந்து கவனித்து வந்தோம். நம் கொள்கையின் மாண்பையும், சிறப்பையும், காப்பாற்றவும், எதிர்காலத்தில் நம் கொள்கைகள் நாட்டிலே மதிக்கப்படவும் வேண்டி, தவறு செய்பவர் தலைவரேயானாலும் கண்டிக்கத்தவற மாட்டோம், என்ற நமது உள்ள உறுதியை எடுத்துக்காட்டவே இங்குக் கூடியிருக்கிறோம்.

நம் தலைவர் பெரியார் தமது திருமணத்திற்கு விளக்கம் கூறும் முறையில் வெளியிட்டு வந்த அறிக்கைகள் யாவும் கழகத்தோழர்களின் மனதைப் புண்படச் செய்ததோடு, அவர் பேரில் வைத்திருந்த நம்பிக்கையை இழக்கச் செய்து விட்டன. எனவேதான் இலங்கை திராவிடர் கழகத்தின் மத்திய நிர்வாகக் குழு நீண்ட ஆலோசனைக்குப் பிறகுதான் பெரியாரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றியதோடு, இலங்கை திராவிடர் கழக அமைப்பையும், இனி இலங்கை திராவிட முன்னேற்ற கழகமென மாற்றியமைத்துப் பணிபுரிய முன் வந்துள்ளது. இத்தீர்மானம் இலங்கை திராவிடர் கழகத்தின் மிகப்பெரும்பான்மையினரின் கருத்தாகும் என்பதை மிகப் பணிவுடன் உங்கள் முன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தீர்மானங்களை, ஏற்றுக்கொள்ளவோ,மாற்றவோ, தள்ளிவிடவோ உங்களுக்குப் பூரண உரிமையுண்டு. எனவே உங்கள் கருத்தைத் தெரிவித்த பின் முடிவுரையில் சில பேசுகிறேன், எனக் கூறி தோழர் மா. இளஞ்சேரனைப் பேச அழைத்தார்.

தோழர் மா. இளஞ்சேரன் அவர்கள், இலங்கை திராவிடர் கழகம் நிறைவேற்றியுள்ள மூன்று தீர்மானங்களையும் விளக்கி இ. தி கழகத்தில் தறபோது ஏற்பட்டுள்ள நிலைமையையும், நமது எதிர்காலப்பணியைக் கவனப்படுத்தியும், ஓர் அறிக்கை மூலம் தமது கருத்தைப் படித்துக்காண்பித்தார். அதன் சுருக்கமாவது:—

"தோழர்களே! தமிழகத்திலே தலைவர் பெரியார் செய்துகொண்ட பொருந்தாத்திருமணத்தின் மூலம் கழகத்திலே ஏற்பட்டுள்ள கொந்தளிப்பையும் கொதிப்பையும் நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். சென்ற 25, 30 வருடங்களாக நாம் ஆற்றிவந்துள்ள பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கு மாறாக தலைவர் பெரியார் செய்துகொண்ட பொருந்தாத் திருமணத்தின் மூலம் பெரியதோர் களங்கம் ஏற்பட்டு நம்மையெல்லாம் வேதனைப்படும்படியும், வெட்கப்படும்படியுமான நிலை ஏற்பட்டு விட்டது. இந்நிலையிலிருந்து நாம் நம் கொள்கையைக் காப்பாற்றவும், நமது எதிர்காலப்பணியைத் தொடர்ந்து செய்யவும் ஓர் உருவான அமைப்பை ஏற்படுத்தவுமே இங்கு குழுமியுள்ளோம்.

பலப்பல முறைகளில் தலைவாது தாக்கிதுகளுக்கு நாம தலைவணங்கியுள்ளோம், அவர் தலைமையில் கொண்டுள்ள நம்பிக்கையின் காரணத்தால். ஆனால் சமீபகாலத்தில் அவர் கொண்டுள்ள போக்கும் செயலையும் நம்மால் ஒப்புக்கொள்வதற்கில்லை! காரணம், அவர் கருத்துப்படி தனக்குப்பிறகும் இயக்கத்தை ஓரளவுக்காவது நடத்திச் செல்ல வேண்டி, ஜனநாயக கோட்பாடுகளை மதிக்க மறுத்து இயக்கத்திற்கும், இயக்க நடப்புக்கும் வாரசு தேட முனைகிறார்.

இயக்கப் பணிக்காக இன்றுவரை கஷ்ட நஷ்டமேற்றுப் பணிபுரிந்து வந்துள்ள உண்மை ஊழியர்களை, இயக்கத்தின் பேரால் வயிறு வளர்ப்பவர்களென்றும், துரோகிகளென்றும், சதிகாரர்கள், விஷமிகள் என்றெல்லாம் சொல்லம்பு தொடுத்திருக்கிறார். மேலும் திராவிடர் கழகத்திற்குத் தானே சர்வாதிகாரி யென்றும் இங்கு ஜனநாயகத்திற்கு இடமில்லை யென்றும் திட்டமாய்க் கூறிவிட்டார். எனவேதான் நாம் அவருடைய சர்வாதிகாரத் தலைமையை உதறித்தள்ளுவதோடு அவருடைய செயலையும் நம்மால் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. ஆகவேதான் நாம் நமது எதிர்காலப் பணியை திறம்பட நடத்திச் செல்ல, இலங்கைத் திராவிடர் கழகத்தை, இலங்கைத் திராவிடர் முன்னேற்றக் கழகமென மாற்றியமைத்துப் பணிபுரிய முன்வந்திருக்கிறோம். அதற்காக நீங்கள் அளித்துள்ள பேராதரவுக்கு மிக மிகநன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது எதிர்காலப் பணி மிகப் பெரிய போராட்டம் நிறைந்ததாகவே இருக்கும். அதற்கு நமது நாட்டுத் தலைவர்களின் ஒத்துழைப்பும், குறிப்பாக திராவிடமுன்னேற்றக் கழகத்தின் பெருந்துணையும் நமக்கு நிரம்பவேண்டியிருக்கிறது. சமீபத்தில் தமிழ்நாட்டிலிருந்து தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் இலங்கை வரவிருக்கிறார்கள். அதசமயம் நாம்நமது நிலைமைகளை எடுத்துக்கூறி, அவர்களோடு கலந்து இலங்கை அரசியலிலே நமக்குக் கிடைக்கக்கூடிய நியாயமான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முயலவேண்டும். ஆகவே நீங்கள் ஒவ்வொருவரும், நமது உரிமைப் போராட்டத்தில் பங்கு கொள்ள இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகத்தைப் பலப்படுத்தி அதன்வழி நின்று நமது எதிர்காலத்தில் மக்களுக்குச்செய்யவேண்டியகடமையை மறவாது, நற்பணியாற்ற வேண்டுமென உங்கள் அனைவரையும் மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனக்கூறி முடித்தார்.

அடுத்தபடியாக, கல்லிடைக் குறிச்சி திராவிடர் கழகத் தலைவர் தோழர் டி.எம். பீர்முகம்மது பேசினார். சில கம்யூனிஸ்ட் தோழர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத்தக்க பதிலளித்தார்கள். பின்னர், தோழர். எ. இளஞ்செழியன் அவர்கள் பேசினர். அடுத்தபடியாக, தோழர் எஸ். டி. சுப்பையா அவர்களும் திராவிடர் முன்னேற்றக்கழகத்தோற்றம் ஏன் என்பது பற்றி நீண்ட நேரம் விளக்கிப் பேசினார்கள்.

பின்பு இலங்கை திராவிடர்கழகப்பொதுச்செயலாளர், அ. ம. அந்தோனிமுத்து அவர்கள் இலங்கை திராவிடர் கழகச்செயற்குழுவில் நிறை வேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களையும் படித்துக்காண்பித்தார்.

செயலாளர் படித்து முடித்ததும் தோழர் வ. ஆ. அழகிறைவன் அவர்கள் ஆமோதித்தார்கள். கூட்டத்தலைவர் எழுந்திருந்து. இத்தீர்மானங்களை ஆட்சேபிப்போர் தங்கள் கருத்துக்களைக் கூறலாம் என, பத்து நிமிட நேரம் அவகாசம் அளித்தார்கள். யாரும் கூட்டத்தில் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னர் தலைவர் அவர்கள், தீர்மானத்தை ஆமோதிப்பவர்கள், தங்கள் கைகட்டுதலைத்தெரியப்படுத்தக் கேட்டுக்கொண்டார்கள். உடனே நீண்ட கைதட்டுதலுக்கிடையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு 70 பேர் கொண்ட பொதுக்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. அதில் தற்காலிக அமைப்புக்குழுவிற்கு, தோழர் மா. இளஞ்சேரன் அவர்களை செயலாளராகக்கொண்டு எழுபேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்பு தலைவர் அவர்கள் முடிவுரை கூறிக் கூட்டத்தினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். பிறகு செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இரவு 9 மணிக்குச்சிறப்பாக முடிவுற்றது. (வி-உ)

பக்தரின் பரிதாப மரணம்

கை நழுவிய கடவுள் காப்பாற்றப்பட்டார்!

சங்கரன் கோயில், அக். 28—

இவ்வூர் சங்கரமகாலிங்கப் கோயில் கோமதியமமன், மணப்பெண்ணாக அலங்கரிக்கப் பட்டு, வாகனத்தில் ஊர்வலமாகத்தூக்கிச் செல்லப்பட்டார். அப்போது திடீரென ஆயக்கால் முறிந்து, சாமி வாகனத்துடன்கைநழுவிகீழேவிழ அதனால் வாகனம் தூக்கிசென்ற தோழர்களில் ஒருவரான தோழர் திருவாழுனி என்பவருக்குப் பலத்த காய மேற்பட்டு, மறு நாள் மாண்டார். பக்தனின் கதியைச்சிறிதும் எண்ணாது, கீழே விழுந்து விட்ட கடவுள்மட்டும்காப்பாற்றப்பட்டு பிராயசித்த அபிஷேகமும் பிரமாதமாய் நடைபெற்றதாம். அதற்கென பணமும்வசூலிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. "தன்னைச்சுமந்த பக்தனின்உயிரைக்காக்க கையாலாகா கடவுள்என்னகடவுள்? வறுமையால் வாடும் இறந்து போன பக்தனின் குடும்பநிலையைச் சிறிதும் கவனிக்கவில்லை.சிறிதும் காயம்படாத (பட்டாலும்வலிக்காத) சிலைக்குஏற்பட்ட விபத்துக்காக மட்டும்புரோபிஷேகமாம்! இது பெரும அனியாயம்" என்று பலவாறாக மக்கள் பேசிக்கொள்கின்றனர். (ஓ-கி)

கழக நடவடிக்கைகள்

பெரியார் இராமசாமி நகர் (பெங்களூர்):—இந்நகரக் கிளையின் செயற்குழுத் தேர்தல் 21-10-49-ல் தோழர் எம். கி. வேணுகோபால் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர்:—பெ. ம. அப்பாதுரை; துணைச் செயலாளர்:—கி முனுசாமி; பொருள் ‍ாளர்: பி. சுப்பிரமணியம்; விளம்பர உறுப்பினர்கள்:—பெ. ம. துரைசாமி, மு. கி. வேணு.

ஏனைய செயற்குழுவினர்:—கி. முனுசாமி, ஆர். இராகவன், கே. கே. கந்தராம், எம். தம்பா, பி. கே. பெருமாள், டி. பொன்ரங்கம். கே. பி. நல்லதம்பி, கே. கே. இளஞ்சேரன். பின்பு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ—ர்)

* * *

அறந்தாங்கி:—இவ்வூர்க் கிளையின் செயற்குழுக் கூட்டம் 23-10-49-ல் கூடியது. அதுபோது தோழர்கள் பொ. துரைக்கண்ணு காசிநாதன், ஓவியன்கண்ணு மூவரும் செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

தவட்டுப்பாளையம்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 24-10-49-ல் கூடி, துவக்க விழா நடத்துவது பற்றி ஓர் தீர்மானம் நிறைவேற்றிற்று. (வி-உ)

* * *

சென்னை ஓட்டேரி;—இக் கிளையின் செயற்குழுக் கூட்டம் 23-10-49-ல் கூடியது. அதுபோது நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர்கள் ஆர். டி அரசு, எ. கே. சாமி இருவரும் மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

சணியூர்:—இவ்வூர்க் கிளையின் செயற்குழுக் கூட்டம் 23-10-49 ல் கூடியது. அதபொழுது செயற்குழுவில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி—உ)

* * *

சேலம் அம்மாப்பேட்டை:—இவ்வூர் மெயின்ரோடு கிளையின் செயற்குழுக் கூட்டம் 26-10-49 ல் கூடிற்று. அதுபோதுகொடியேற்று விழாவின் வரவு செலவுக் கணக்கு பார்க்கப்பட்டு, மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (பொ-உ)

* * *

சென்னை புதுப்பேட்டை:—இவ்வூர் கிளையின் செயற் குழுக் கூட்டம் 31—10—49-ல் கூடியது. அதுபோது 21—11—49 ல் துவக்கவிழா நடத்துவதென்றும், வெள்ளி தோறும் பேச்சுப் பயிற்சிக் கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

திண்டிவனம்:—இந் நகரக் கிளையின் செயற்குழுக் கூட்டம் 30—10—49-ல் நடைபெற்றது. அது போது துவக்க விழா வரவு செலவுக் கணக்கு பார்க்கப்பட்டது. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

திருச்சோறை:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 29—10—49-ல் கூடி, துவக்க விழா வரவு செலவுக் கணக்கு பார்த்தது (து. செ-ர்)

* * *

கள்ளக் குறிச்சி:—இவ்வூர் கிளையின் செயற்குழு கூட்டம் 26—10—49-ல் தோழர் குமார. தணிகாசலம் தலைமையில் கூடியது. அது போது, தோழர் அண்ணாத்துரையை வரவழைத்து வரவேற்பு வழங்குவதென்றும், நிதி சேர்த்து அளிப்பதென்றும் இன்னும் சில தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

* * *

காரணமங்கலம்:-இவ்வூர் (விசயகோபாலபுரம்) கிளையின் செயற்குழுக் கூட்டம் 29—10—49-ல் கூடியது. அது போது, துவக்க விழாவிற்கு அழைக்கப்பட்டத் தோழர்களுக்கு நன்றி தெரிவித்தும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் துவக்கவிழா வரவு செலவு பார்க்கப்பட்டது. (செ—ர்)

* * *

கொளத்தூர்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 30—10—49-ல் தோழர் எ. ஜி. மாரிமுத்து அவர்கள் தலைமையில் கூடிற்று தோழர் ஜி. சதாசிவம் நாட்டுப்பண் பாடினர். பின்பு தலைவர் தம் முகவுரையில் கழகக்கொள்கைகளைப் பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றினர். பின்பு சில தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

மதுரை:—இந் நகரக் கிளையின் செயற்குழுக்கூட்டம் 30-10-49ல் நடைபெற்றது. அதபோது சில முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்பு 28 10-49 இரவு நடைபெற்ற காங்கிரஸ்காரர்களால் தி. மு. க. கொடி இறக்கப்பட்டதையும், அவர்களால் செய்யப்பட்ட விஷமத்தனங்களையும் கண்டித்துத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. (செ-ர்)

* * *

சென்னை திருவல்லிக்கேணி:—இக்கிளையின் செயற்குழுக் கூட்டம் 30—10—49ல் கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றிற்று. (வி-உ)

* * *

ஈரோடு:— இந் நகரக்கிளையின் செயற்குழுக் கூட்டம் 30-10-49ல் நடைபெற்றது. தோழர்கள் எஸ். ஆர். சந்தானம்,எஸ். அப்பாவு, என். இ. பாலகுரு, எ. சங்கரய்யா ஆகியோர் கழக எதிர்கால வேலைகள் குறித்துப்பேசினர். பின்பு, இக்காலுகாவிலும், இந்நகரிலும் மிக அதிகமான உறுப்பினர்களைச்சேர்ப்போருக்கு முறையே, ரூ 25, ரூ. 15 மதிப்புள்ள வெள்ளிக்கோப்பைகள் அளிப்பதென்றும், இன்னும் சில தீர்மானங்களும் தீர்மானிக்கப்பட்டன. (ந-சி)

தலைமறைவாயிருந்த குற்றவாளி பிடிபட்டார்

சென்னை, நவ. 1—

செங்கற்பட்டு ஜில்லா பாலமலை போலீஸ் கேஸில் சம்பந்தப்பட்ட பெரிய மாணிக்கம் என்ற (சுமார் 9 வருடகாலமாக தலைமறைவாக இருந்த) குற்றவாளி 29—10—49ல் நெல்லூர் ஜில்லா, டம்மாய்ப்பாளையத்தில் பிடிபட்டார். குற்றவாளி பாலமலைப் போலீஸ் எட்காண்ஸ்டேபிள் No. 656 பலராம முதலியாரால் தேடப்பட்டு இறுதியாகக் கைது செய்யப்பட்டுச் சைதாப்பேட்டைச் ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறார். கைதிதன் குடும்பத்திலேற்பட்ட சச்சரவு காரணமாக 1940ல் தன் தம்பியையும், தகப்பனையும் கத்தியால் குத்தியதின் பலனாய் தம்பி சின்ன மாணிக்கம் இறந்ததாகக்கூறப்படுகிறது.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.